
# சவுந்தரியம்



## அமரர் சௌந்தராம்பிகை இராசையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

23.07.2018

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சவுந்தரியம்



காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

## சௌந்தராம்பிகை இராசையா

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

நினைவுமலர்

**23.07.2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஊனினையும் உயிரினையும் உருக்கி எங்கள் குடும்ப விருட்சத்தின் ஆணிவேராக நின்று தாங்கி நாங்கள் நற்பெயருடனும் நற் செல்வங்களுடனும் வாழ வழிசமைத்து ஆறாத் துயரில் எங்களை ஆழ்த்தி இறையடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே எங்கள் கண்ணீரையும் கவலைகளையும் கலந்து செய்த இம்மலரினை தங்கள் திருவடிகளுக்கு சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இவ்வுலகில்
28.10.1939

இறையுலகில்
23.06.2018

அமரர்

# சௌந்தராம்பிகை இராசையா

அவர்கள்

## திதி நிர்ணயம்

ஆண்டு ஏவிளம்பிதனில் அமைதிங்கள் ஆனிதான்
பூண்ட ஏகாதசிசேர் வளர்பிறையில் - ஈண்டிருந்துமிக
ஆண்ட சௌந்தராம்பிகை சேர்ந்தாள் கொடுவிடம்
உண்ட கண்டன் திருத்தாளே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை யென்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவர்
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் - குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் - தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் - குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்- பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சௌந்தராம்பிகை இராசையா

## அவர்களின்

# வாழ்க்கைச் சரிதம்

ஈழமணித் திருநாட்டின் சிரமெனத் திகழும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் மூக்கில் அணிந்துள்ள மூக்குத்தியாக அருள் வளமும், பொருள் வளமும், தெருள் வளமும் மிகுதியாகப் பெற்றுத் துலங்கும் திருநகர் காரைநகர். ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் திண்ணபுரம் சிவன் கோயிலைச் சிறப்புத் தலமாகவும், குறிச்சிகள் தோறும் ஆலயங்கள் நிறைந்து விளங்குவதும் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு நெய்தல் நிலமும், மருத நிலமும் சிறந்து விளங்கும் காரைமாநகரில் போர்க்களம் பல கண்டதால் களபூமி என வழங்கப்படும் குறிச்சியில் சத்திரந்தை என்னும் இடத்தில் விசுவப்பா என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட உயர் சைவ வேளான் குல வணிக திலகம் வினாசித்தம்பிக்கும் அவர் தம் அன்பு மனையாள் சீதேவிப் பிள்ளைக்கும் கனிஷ்ட புத்திரியாக ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தொன்பதாம் ஆண்டு ஐப்பசி மாதம் 28 ஆம் திகதி சௌந்தராம்பிகை பிறந்தார்.

இவரது மூத்த சகோதரர்களாக முறையே கந்தையா, வைத்திலிங்கம், சரஸ்வதி, தியாகராசா, பூமணி, வாலாம்பிகை ஆகியோர் திகழ்ந்தனர் ஆரம்பக்கல்வியை களபூமி ஆலடி அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றுத் தேறினார். இடைநிலைக் கல்வியை ஆங்கில மொழி *(English Medium)* மூலம் காரைநகர் இந்துக்கல்லூரியில் கற்று *1956* ஆம் ஆண்டு நடைபெற்ற *S.S.C* பரீட்சையில் சித்தி பெற்றார். தொடர்ந்து கலைப்பிரிவில் *(arts)* ஆங்கில மொழி மூலம் *H.S.C* கற்றார். கல்வி கற்கும் காலத்தில் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்த இவர் தமிழ் அறிவுப் போட்டி, ஆங்கில தினப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொண்டார்.

ஆங்கில மொழியில் கற்று தேர்ச்சி பெற்றதனால் அரச வேலை வாய்ப்பு நாடி விண்ணப்பங்களை அனுப்பிக் கொண்டும் ஓய்வு நேர பொழுது போக்காக பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டலுடன் ஆங்கில இலக்கண கட்டுரைகளையும் மாலை நேரத்தில் தனது வீட்டுக்கு வரும் மாணவர்களுக்குக் கற்பித்து வந்தார். *1965* ஆம் ஆண்டில் ஆங்கில ஆசிரியராக நியமனம் கிடைத்த போதிலும் பொருள்வளம் மிக்க குடும்பம் என்பதாலும், அக்காலத்தில் பெண்கள் வேலைக்குச் செல்வதை கௌரவமான குடும்பத்தார்கள் விரும்புவதில்லை அதனால் தனது சிரேஷ்ட சகோதரனின் வேண்டுகோளுக்கிணங்க அந்த உத்தியோகத்தை நிராகரித்தார்.

திருமண வயதை அடைந்த இவருக்கு பெற்றோர் அமரத்துவமடைந்த நிலையிலும் இவரது சகோதரர்களின் முயற்சியினால் கருங்காலியைச்சேர்ந்த சைவ வேளாண் குல திலகம் அம்பலவாணர் சண்முகத்தினதும் பார்வதிப்பிள்ளையினதும் கனிஷ்ட புதல்வனாகிய இராசையாவுடன் *1975* ஆம் ஆண்டு தைமாதம் *31* ம் திகதி திருமண பந்தத்தில் இணைந்துகொண்டார். இராசையா ஆங்கில மொழி மூலம் *(English Medium) H.S.C* வரை கற்று அப்போதிக்கரிக்குப் (உதவி வைத்திய அதிகாரி) படித்தார். பின்பு அரச பணிக்குச் செல்லாது தமது சகோதரர்களுடன் சேர்ந்து பதுளைநகரில் "பார்வதி ஸ்ரோர்ஸ்" என்னும் வியாபார நிலையத்தைச் சிறப்பாக நடத்தி வந்துள்ளார். *1983* இல் நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் பதுளையில் வியாபாரத்தைக் கைவிட்டு ஊருடன் வந்து வாழ்ந்து வந்தார்.

இராசையாவும் சௌந்தராம்பிகையும் தமது இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாக *1976* இல் தனலக்சுமி (ரதி) என்ற அழகிய பெண்குழந்தையையும், *1980* இல் தவயோகம் (குட்டி) என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வப்புதல்வியையும் பெற்றெடுத்தனர். இரண்டு குழந்தைச் செல்வங்களுடன் அகமிக மகிழ்ந்து வாழும் காலத்தில் *1984* இல் திடீரென நோய்வாய்பட்ட இராசையா *1984* வைகாசி *27* இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

சௌந்தராம்பிகை எதிர்பாராது தனது வாழ்க்கைத் துணையை இழந்தாலும் மனம் தளராமல் சுறுசுறுப்பும், ஆக்கமும், ஊக்கமும் மிக்கவராகத் திகழ்ந்து தனது இரண்டு பிள்ளைகளையும் காரைநகர் வியாவில் சைவ வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும் காரை நகர் யாழ்ற்றன், இந்து ஆகிய இரண்டு கல்லூரிகளிலும் இடை நிலைக் கல்வியையும் பெற வழிகாட்டியாக விளங்கினார்.

*1991* இல் ஏற்பட்ட காரைநகர் இடம் பெயர்வைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் குடியேறி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் க. பொ.த உயர்தரத்தில் வணிகப் பிரிவில் தனது பிள்ளைகளைக் கல்வி கற்பித்து பின்பு உயர் கல்வி வரை நன்றாகப் பிள்ளைகளைக் கற்பித்தார்.

குடும்ப சூழ்நிலை, போர்கால இடர்கள் என்பவற்றையும் தாங்கி தனது இரண்டு புதல்விகளையும் சிறந்த கல்வியறிவூட்டி அவர்களுக்கு அரச தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருந்த வேளை மூத்த புதல்வி தனலக்சுமியான ரதிக்கு காரைநகர் புது றோட்டைச் சேர்ந்த (இல *903* சில்வா வீதி வட்டக்கச்சி) கணபதிப்பிள்ளை இராசரத்தினம் விசாலாட்சி தம்பதிகளின் நான்காவது புத்திரன் பற்பநாதனைத் திருமணம் பேசி சிறப்பாக திருமணம் செய்து வைத்தார். பத்மநாதன் தனலக்சுமி தம்பதிகளின் இல்லறம் என்னும் நல்லறத்தின் பயனாக வதுர்சன் (யாழ் புனித பரியோவான் கல்லூரி) நிவேதனா (யாழ் இந்து மகளிர் கல்லூரி) யிதுர்சனா (யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகிய பேரப்பிள்ளைகளைக் கண்டு ஆகாரம் ஊட்டி அழகுபார்த்து அகமகிழ்ந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய மகள் தவயோகத்தை காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த இங்கிரியா வர்த்தகர் பாலசிங்கம் சரோஜினிதேவி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் இன்பகாந்தன் அவர்களுக்கு திருமணம் பேசி 2008 ஆம் ஆண்டு ஆவணிமாதம் திருமணம் செய்து வைத்தார். இன்பகாந்தன்தவயோகம்(குட்டி) தம்பதிகளின் இல்லறமென்னும் நல்லறத்தின் பயனாக அக்ஷயா, ரொக்ஷயா, லக்ஷனா ஆகிய பேரப்பிள்ளைகள் பெரிய பிரித்தானியாவில் பிறந்ததையிட்டு அடிக்கடி தொலைபேசியில் அளவளாவி மகிழ்ந்திருந்தார். இளைய மகள் குட்டி மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தார்.

அமரர் சௌந்தராம்பிகையின் ஆண் சகோதரர்களில் மூத்த சகோதரர் அமரர் கந்தையா அவர்கள் புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றிய பின் வர்த்தகராகவும், கிராமச்சங்க உறுப்பினராக வும் இருந்து அமரத்துவமடைந்தார். இவரது அடுத்த சகோதரர் அமரர் வைத்திலிங்கம் அவர்கள் உதவி அரசாங்க அதிபராக இருந்து ஓய்வு பெற்ற பின் அமரத்துவமடைந்தார். இவரின் இளைய சகோதரர் தியாகராசா அமரத்துவமடையும் வரை வர்த்தகத்துறை யில் இருந்தார். இவருடைய பெண் சகோதரிகள் அமரர் சரஸ்வதி ஆறுமுகம், அமரர் நேசரத்தினம் சுப்பிரமணியம், அமரர் பூமணி இராசையா மற்றும் அமரர் வாலாம்பிகை யாவரும் வாழ்வாங்கு வாழ்ந்து இவருக்கு முன்பாகவே அமரத்துவம் அடைந்து விட் டார்கள்.

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகன் மீதும் சத்திரந்தை பிள்ளையார் மீதும் பாலாவோடை குறிஞ்சாக்களி அம்மன் மீதும் தீராத பக்தி கொண்ட விசுவப்பா தம்பதிகளின் கனிஷ்ட மகளான சௌந்தராம்பிகை தனது அந்திம காலத்தில் காரைநகரில் தனது சொந்த வீட்டிற்கு அடிக்கடி சென்று தங்கி வருவார். வட்டக்கச் சியிலும், பிறவுண் வீதி வீட்டிலும் மாறிமாறி வசித்து வந்த இவர் கள்ளங்கபடமற்ற மனமும், நேர்மையும் துணிவும் கொண்ட இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் என்று பாயில் படுக்காமல் நடமாடிக் கொண்டே எந்தவித மரண வேதனையுமின்றி *2018* ஆம் ஆண்டு ஆனி மாதம் *23* ஆம் திகதி சிவ சிவ என்று கூறிக்கொண்டு சௌந்தராம்பிகை சமேத தில்லைநடராசப் பெருமானின் திருப்பாதங்களை அடைந்து விட்டார். அமரரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல கருங்காலி போசுட்டி முருகப் பெருமானின் பாதங்களைப் பணிந்து நிறகின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !*

**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

## (திருப்பெருந்துறை)

திருச்சிற்றம்பலம்

**தொல்லை யிலும்பிறவிச் சூழுந் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்**
**திருவாசகமென்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து!

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தர் சஷ்டி கவசம்

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலனருள்
கந்தர் சஷ்டி கவசம் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மையல் நடஞ் செயும் மயில்வாகனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற!
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகம் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன் மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்ப ட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொக மொக மொக மொக மொக மொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வா!
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடி புனை நெற்றியைப் புனித வேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம் பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண்குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணை வேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர் வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனைமயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்ச சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட்டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி யுருட்டு கை, கால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலைநோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைசல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன் பதம் பெறவே உன் அருளாக
அன்புட னிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத் தாகவேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்றன் பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்ற டியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்ப வர்கள்
ஒரு நாள் முப்பத் தாறு உருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணி
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்ன ரெண்மர் செயலது அருளுவர்
மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்தநாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரை பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கர ரத்தடி
அறிந் தெனதுள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாக
சூரபத் மாவை துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர் குவந்தமு தளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலாவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேளே போற்றி
உயர்திரு கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயக் கிரியைகள்

### கிரியைகளின் பங்கு

உலகங்கள் யாவற்றிற்கும் முதற் காரணமாகிய பொருள் பிரணவம் எனப்படும். அதற்குத் தலைவராய் இருக்கும் சிவசக்திக்கு விநாயகர் என்று பெயர். (வி - இல்லாத, நாயகர் – தலைவர்) அஃதாவது தமக்குத் தலைவரில்லாதவர், மேலான தலைவர் எனப் பொருள் படும். எனவே முதற் செய்யப்படும் கிரியை விநாயக வணக்கம். கிரியை இனிது நடந்து முடிவுற முதல்வனை வணங்குதல் இது. குரு சமய கிரியைகளுக்கெல்லாம் தலைவராதலாலும் அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்கின்றதாலும் குருவையும் வழிபடுபர். (கு - மலம், ரு - நீக்குபவர்) சந்தணம், மஞ்சள் அல்லது கோமயம் (பசுச் சாணம்) இவற்றில் ஒன்றில் பிள்ளையாரை உருவாக்கி அறுகம்புல் மேலே சாத்தி வணங்குவது வழக்கம்.

### பவித்திரமணிதல்

பவித்திரமானது மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப் பட்டு அணிவிரலில் அணியப்படுவது. இதன் நோக்கம் கிரியை செய்யும் போது மனம், வாக்கு, காயங்களால் வரத்தக்க பாவங்களி னின்றுங் காத்தல் (பவித்திரம் - பதனாத் த்ராயதே பாவத்திலே விழுதலினின்றும் காப்பது - காமிகம்)

### சங்கற்பம்

சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனதைப் பதித்து அதிலே நிறுத்துவது இன்ன காலத்திலே, இன்ன இடத்திலே இன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்ப வாக்கியத்தின்சுருக்கமானகருத்து. நிகழுஞ்சிருஷ்டித்தொடக்கத்திலிருந்து அன்று வரையும் உள்ள காலம் இதில் குறிக்கப்படுவதாலேயே காலத்தின் பெருமையும் தற்கால வாழ்வில் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.

**சங்கற்ப முறை**

ஆண்கள் வலது கையில் தருப்பை, பூ, அரிசி முதலியவற்றை வைத்துக்கொண்டு வலது கையை மேலாகவும், இடது கையைக் கீழாகவும் வைத்து இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி வலது முழந்தாளில் வைக்க வேண்டும். இதே போன்று பெண்களுக்கு இடது கையில் தருப்பை அரிசி முதலியவற்றைக் கொடுத்து இடது முழந்தாளில் வைக்க வேண்டும்.

**சங்கற்ப வாக்கியத்தின் கருத்து**

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரமாவின் இரண்டாவது பரார்த்தத்தில் சுவேதவராக கற்பத்தில் வைவஸ்வத மத்வந்ரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்திற் கலியுகத்தில் முற்பகுதியில் ஐம்பூத்துவீபத்தில் பாராத வருஷத்தில் பரத கண்டத்தில் மேருவுக்குத் தெற்கே *(இடத்தின் பெயர்)* பிரபவ முதலான அறுபது வருஷங்கள் *(இன்ன)* வருடத்தில் *(இன்ன)* சமயத்தில் *(இன்ன)* பருவத்தில் - *(இன்ன)* மாதத்தில் *(இன்ன)* பட்சத்தில் *(இன்ன)* திதியில் வாரத்தில் நட்சத்திரத்தில் *(இன்ன)* நன்மையான யோகம் *(இன்ன)* நன்மையான காரணமுள்ளதாய் விசேட குணத்தோடு சேர்ந்த இந்த புண்ணிய தினத்தில் மம *(என்னுடைய)* - *(இன்ன)* நோக்கமாக *(இன்ன)* கிரியையை செய்யப்போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பம் வைத்தல்

கடவுளைக் கும்பத்தில் வழிபடும் போது, கும்பம் உடம்பின் பாவனையாகக் கருதப்படுகிறது. வாழையிலையை அதன் தலைப் பகுதியை வடக்கு அல்லது கிழக்கு பக்கமாக வைத்து அதில் நெல் அல்லது பச்சை அரிசி இட்டு, தண்ணீர் நிறைந்த குடம் வைத்து ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது மாவிலைகளுக்குக் கீழ் தேங்காயைக் குடத்தின் மேல் வைத்து கும்பம் வைக்கலாம். கும் பத்தில் நூல் சுற்றி ஒரு பட்டுப் போர்த்தல் வேண்டும். தேங்காய் தலையாகவும், மாவிலைகள் தலைமயிராகவும், குடம் தசையாக வும், நூல் நாடிகளாகவும், பட்டு தோல்களாகவும், தண்ணீர் இரத்த மாகவும் கருதப்படுகிறது. கும்பத்திற்குள் இரத்தினம் போடப்பட் டால் அது எலும்பாகப் பாவனை செய்யப்படும்.

## அன்றாடக் கிரியைகளில் சில முறைகள்

### மாவிலை

இது முக்கியமான மங்களப் பொருளாகவும்,தோரணமாகவும் கட்டப்படுகிறது. ஆலயங்கள் மற்றும் விழாக்கள் இல்லங்கள் திருமண வைபவங்களிலும் இம் மங்களப் பொருள் பயன்படுத் தப்படும் சகல வைபவங்களுக்கும் கும்பம் வைக்கும் பொழுது சடையாகப் பாவிக்கப்படுகிறது. தேங்காய் தலையாகவும், கும்பத்துக் குச் சுற்றும் நூல் நாடியாகவும், இதற்குள் இடும் நீர் இரத்தமாகவும், கட்டப்படும் பட்டு உடையாகவும் பயன்படுத்தப்படும். மாவிலை தோரணம் அமைக்கும் போது மூன்று முறையாகப் பயன்ப டுத்தப்படும்.

*1.* **நற்காரியம் :** ஆலயங்களில் நடைபெறும் உற்சவம், விழாக் களிலும், திருமண மண்டபங்களிலும் வீடுகளில் சுபகாரியங் கள் நடைபெறும் போதும் மாவிலைத் தோரணம் இலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காம்பு நுனியின் முற்புறமாக வளைத்து இலையின் முற்பகுதியில் காம்பைக் குத்தி தொங்கவிடுதல். மாவிலை தலை குனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும். (ஐந்து அல்லது ஏழு இலைகளைக் குத்தலாம்) இது சுபகாரியத்திற்குரிய அறிகுறியைக் காட்டும் தன்மையாகும்.

2. **கும்பம் வைக்கும் போது :** தேங்காயின் கீழ் அமைத்தல், ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகளை அமைத்தல் சிறப்பாகும்.

3. **அபரக் கிரியைக் காலங்கள் :** இது வீட்டில் மரணச்சடங்கு நிகழும் போது அமைக்கப்பட வேண்டிய முறை. மாவிலையின் காம்பு நுனியைப் பின்பக்கமாக மடித்துக் குத்தி தொங்கவிடல் முறையாகும் இது இம்முறைக்கு மட்டும்.

**வாழைமரம்**

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில் திருமண வைபவங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்கு பெரும் பயனைத் தர வல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல், இதன் தண்டு, காய், பழம், பூ, கனி உணவாகவும், நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன் பயன் எப்படியோ அதே போல் எல்லோரிடமும் இப்படியான பயனைப் பெறக்கூடிய நிலை வர வேண்டும். இதனை அழிக்க முடியாது. இது வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழை மரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியை மங்களமாக அமைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும். மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்காய் வாழை மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தைத் தெரிவிப்பதன் பயனாக எடுத்துக்காட்டாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழை இலையில் பயன்படுத்தும் முறை, கும்பம் வைக்கும் போது தலைநுனிப்பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை அல்லது வடக்குத் திசையாக அமைத்து கும்பம் வைக்க வேண்டும். இதுமட்டுமல்ல சாப்பிடும் போது தலை நுனி இடப்பக்கமாக இருத்தல் வேண்டும். எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழையி லையின் தலை நுனி தெற்குப் பக்கமாக போடுதல் வேண்டும்.

### தென்னந் தோரணம்

தென்னங்குருத்து தோரணத்தின் நுனி கீழ்ப்பக்கமாக இருக்கும் படியாக சுபகாரியங்களுக்கும், மேற்பக்கமாக அபரக் கிரியைகளுக் கும் அமைய வேண்டும். தோரணத்திற்கு வெட்டும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.

## குடும்பச் சடங்குகள்

### அன்னப் பிராசனம்

பிறந்து ஆறாம் மாதம் முதல் இரட்டை மாதங்களில் ஒன்றில் ஆண் குழந்தைக்கும், ஐந்தாம் மாதம் முதல் ஒற்றை மாதங்களில் ஒன்றில் பெண்குழந்தைக்கும் அன்னப்பிராசனம் செய்யலாம். பிள் ளையார் பூசை செய்து திருவிளக்கேற்றி இடம் பெறுவது சிறப்பு.

இதற்கு பால் பருக்கல், சோறு தீத்துதல் என பேச்சுவழக்கில் கூறப்படுவதுண்டு. ஆண்களுக்கு 6ஆம், 8ஆம், 10 ஆம், 12 ஆம் மாதமும், பெண்களுக்கு 5ஆம், 7 ஆம், 9ஆம், 11ஆம் மாதமும் சுப முகூர்த்தமும் பார்த்து உப்பு நீக்கிய, சர்க்கரை அமுது அல்லது கற்கண்டு அமுது பொங்கி, ஆலயங்களில் அல்லது வீட்டில் வைத்து பூஜை செய்து தந்தை மூன்று தடவை எடுத்து ஊட்டி ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழக் குழந்தையை ஆசிர்வதிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாரம்பம்

இது மூன்றாம் அல்லது ஐந்தாம் வயதுகளில் ஆரம்பிக்கலாம். சுப வேளையில் பிள்ளையார் பூசை, சரஸ்வதி பூசை செய்து வித்தியாரம்பம் செய்தல் வேண்டும். குழந்தைக்கு முதன் முதலில் கல்வி கற்க ஆரம்பித்தல். பெரும்பாலும் எம்மவர்கள் விஜயதசமி எனப்படும் நவராத்திரி விழாவின் பூர்த்தி அன்றே வித்தியாரம் பத்தை மேற்கொள்ளுவார்கள். இருப்பினும் தைப்பூசத்தன்று மற்றும் தை முதல் ஆனி வரையிலான காலப்பகுதியில் ஜாதகரின் நட்சத்திரத்திற்கு ஏற்ப அமைந்த சுப நாளிலும் இதைச் செய்லாம். தந்தை அல்லது ஆலய குரு அல்லது ஆசிரியர் யாரேனும் ஒருவர் இந்த வித்தியாரம்பத்தைச் செய்யலாம். கல்வியின் மேன்மைய டையவே முதற்கல்வியை சுப நாளில் சுபநேரத்தில் செய்வது சிறப்பு.

## வீட்டிற்கு அத்திவாரமிடல்

நாம் வீடு கட்டத் தேர்ந்தெடுக்கும் நிலத்திற்குள் முதன் முதலில் செய்யும் பூஜையானது அத்திவாரமிடல். அதற்கு நாம் முறையாக சிவாச்சாரியாரை அணுகி அவருடைய அறிவுரை ஆசியுடன் புண்ணியஷேத்திரங்களாய் விளங்கும் ஆலயங்களின் வீதிமண், மலை மண், ஆற்று மண், புற்று மண், ஆனைக் கொம்பினால் எடுத்த மண் (ஆனைத் தந்தத்தால் எடுத்த மண்), எருதுக் கோட்டு மண் (எருது பாதம் பட்ட மண்), குளத்து மண் போன்றவற்றை ஒரே அளவில் எடுத்துக் குழைத்து பெட்டி செய்து அப் பேழையில் பள்ளஞ் செய்து அவற்றில் நவரத்தினக் கற்களைப் போட்டுத் தங்கத்தட்டில் "வாஸ்து யந்திரம்) போட்டு ஈசான மூலையில் (வடகிழக்கு மூலையில்) வைத்துப் பூஜை செய்ய வேண்டும். வீட் டின் பெரியார் கையால் அந்தக் குழியில் இட்டு அத்திவாரமிடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குரிய விளக்கம் யாதெனில் காலங்காலமாக எம் சந்ததியினரை வாழவைக்கும் "கிருஹலஷ்மி" எனப்படும் வீட்டையும் எம்மையும் தாங்கி நிற்கும் பூமாதேவியே எம்மால் இயன்ற நவரத்தின, பொன், பொருள், தானங்கள் உமக்கு அர்ப்பணிக்கிறோம். அதை காலைவேளையில் சூரியபகவான் சாட்சியோடு மக்களுக்காகவே தம்மை அர்ப்பணித்து அவர்களுக்காகவே என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும் சிவாச்சாரியார்களின் துணையோடு முறையாக உமக்கு அர்ப்பணிக்கின்றோம். எமது வீட்டு நிலத்தில், நீர்வளம், நில வளம், பயிர் வளம் நிறைந்து நிற்க அருள் வேண்டும் எனப் பிரார்த்திக்கும் பூஜை ஆகும்.

அதே போன்று வீட்டு வேலைகள் நடைபெறும் காலம் வீட்டிற்கு முதல் நிலை, வளை என்பன சுப முகூர்த்தங்ளில் வைக்கும் போது அதற்குரியவர்களுக்கு தச்சு வேலையாளிக்கு வஸ்திரம், தட்சணை, தாம்பூலம் கொடுத்து உபசரித்து அவர் மனம் மகிழ எம்மை வாழ்த்திட வழி செய்யும் உபசாரமாக இது அமையும்.

வீட்டிலே வழிபாட்டறை அமைக்கும் போது கிழக்கு முகமாக அமைப்பது உத்தமம் ஆகும். வழிபாட்டு அறையில் சுவாமிப்படம் தென்மேற்கு மூலையில் கிழக்கு திசையைப் பார்த்ததாக வைக்க வேண்டும். பொதுவாகவே வழிபாட்டறை தனிமையானதாகவும், பரிசுத்த இடமானதாகவும் அமைவது வீட்டிற்குச் செல்வ போகங்களைக் கொடுக்கும். தீட்டுகள் (ஆசௌசம்) வரும் காலங்களில் வழிபாட்டறையை யாரும் அணுகாது மூடிவிடுதல் உத்தமம்.

**கிருஹப் பிரவேசம் (புதுமனை புகுதல்)**

கிருஹப் பிரவேசம் எனப்படுவது ஒரு புதிய வீட்டைக் கட்டி முடித்து, முதன் முதலாய் வீட்டினுள் பிரவேசிப்பதாகும். முதல் நாள் இரவில் செய்யப்படும் பூசையானது "வாஸ்து" எனப்படும். தேவதை வீட்டின் காவல் தெய்வமாய் போற்றப்படுவர். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஸ்துவைக் கும்பத்தில் "ஆவாகனம்" செய்து (மந்திர கிரியா நெறியால் வரவழைத்து) பிரியமாய் பூஜையும் ஹோமத்தில் ஆகுதியும் கொடுத்து, வைக்கோலில் பொம்மை கட்டி, அப் பொம்மைக் குத் தீமூட்டி வீட்டைச் சுற்றியும், வீட்டின் உள்ளேயும் சுற்றி இழுத்து, துஷ்ட தேவதைகள், கண்ணூறுகள் எல்லாம் அந்த நெருப்பில் ஈர்த்தி, மீண்டும் அணுகா வண்ணம் வாஸ்து கும்ப ஜலம் எங்கும் தெளித்து அந்த வைகோல் பொம்மையை முற்சந்தியில் போட்டு எரித்து அந்த துஸ்ட தேவதைகளுக்கு உயிர்ப் பலி கொடுக்கும் முகமாய் நீற்றுப் பூசணி வெட்டி அர்பணித்து விடுதல் வேண்டும்.

அடுத்த நாள் முகூர்த்த நேரத்தின் முன்னர் கோயிலில் பூசையில் வைத்திருந்த விநாயகர், லசஷ்மி, சரஸ்வதி, முருகன் படங்களுடன் தீபம், பூரண கும்பம், பூமாலை, மஞ்சள், தாம்பூலம், பால், பழம் நைவேத்தியங்கள், உப்பு, நெல் முதலிய தானியங்கள் பணம், வெள்ளி, நவரத்தினம், நவவஸ்திரம், ஆபரணம் என்பவற்றை மங்கள வாத்திய கோசத்தோடு சுமங்கலிகள் குறிப்பிட்ட முகூர்த்த நேரத்தில் கொண்டு வந்து வீட்டினுள் பிரவேசிக்கவேண்டும். அதன்மேல் வீட்டினுள் (சுவாமி அறையில்) பால் காய்ச்சி, கணபதி மஹாலஷ்மி விசேட பூஜைகள் செய்து, அந்தணர்கள், சுமங்கலிகள், முதலியவர்களுக்கு தட்சணை, வஸ்திரம் முதலிய தானம் கொடுத்து அவர்கள் திருப்தி அடைந்து மனப்பூர்வமாய் ஆசி வழங்க வேண்டும்.

வீடுகட்டும் போது பின்வரும் விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

1. வாசல்கால் நிலை வைக்காமலும், தரை பூசாமலும், சுவரில் சுண்ணாம்பு அடிக்காமலும் விவாகம் செய்த வருடத்திலும், மனைவி கர்ப்பமாக இருக்கும் காலத்திலும் இயற்கை உத் பாதம் நடக்கையிலும், வேதம் சொல்லாமலும் புதிய வீட் டில் கிருஹப் பிரவேசம் செய்யக்கூடாது.

2. இயற்கை உத்பாதம் என்பது இடியுடன் கூடிய மழைகாலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் புயல் காற்று, நடுக்கம் உண்டாகும் காலம் வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றும் காலம் போன்றவை இவை விலக்க வேண்டும்.

3. கிழமைகளில் செவ்வாய், சனி, ஞாயிறு விலக்கத்தக்கவை. கிருஹப் பிரவேசம் செய்யும் வீட்டுத் தலைவனின் ராசிக்கு எட்டில் சந்திரன் இருக்கும் காலமும் விலக்கத்தக்கவை. மேலும் நல்ல நாளும் கோளும் அறியாமல் பிரவேசிக்கக் கூடாது.

4. முதலில் பசு செல்வதால் லஷ்மி தேவி சந்தோஷம் அடைகிறாள்.

5. அடுத்து தம்பதிகள் குலதெய்வ, இஷ்ட தெய்வப் படங்களுடன் பிரவேசிப்பதால் முன்னோர்களும் கிரக தேவதைகளும் பிரியமடைகின்றன.

6. சுமங்கலிப் பெண் இல்லத்தில் உள்ளே செல்வதால் மஹாலசஷ்மி வாசம் உண்டாகிறது. (ஸ்வஸ்தி வசனம் வேத கோஷம்.) இவை இரண்டாலும் அபச குனங்கள் விலகுகின்றன.

7. நண்பர்கள் அன்று விருந்து உண்பதால் அக்னி அருளும் வாஸ்து தோஷமும் நீங்குகிறது.

8. கூடுமானவரை பூஜை அறையும், கழிவறையும் பக்கத்தில் இல்லாமலும், சமையலறை கடந்து கழிவறை அடையாமலும் வாசலுக்கு நேர் கிணறு வைக்காமலும் முதலில் கட்டிய பிரதான வாயிலை மூடாமலும் இருப்பது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாமகரணம் (பெயர்சூட்டுதல்)**

பூமியிலே பிறக்கும் மனிதனுக்கு முதன் முதல் நடாத்தப்படும் கிரியை "நாமகரணம்" எனப்படும். பெயர் சூட்டுதல் எனவும் கூறலாம். இது குழந்தை பிறந்த ஆசௌசகழிவன்று நடாத்தப்படும் கிரியை ஆகும். குழந்தை பிறந்த நட்சத்திரத்தின் எழுத்தொலிக் கேற்பவும், தெய்வாம்சம் பொருந்திய பெயராகவும், சந்ததி வழித் தோன்றல் பெயராகவும், அமைதல் நன்று குழந்தையின் பெயரை வலது காதில் மூன்று முறை ஓதி கற்கண்டு, தண்ணீர் பருக்க வேண்டும். குழுமியிருப்போருக்கும் இனிப்புப் பானம் வழங்க வேண்டும். இதன் பொருள் எமது வம்சாவழி செயல், தொழில் கொள்ள கண்கண்ட தெய்வமும், சைத்திரிய வம்சமும் நிறைந்த சூரிய பகவானை வணங்கி சூரியன் போல் பெயரும் வாழ்வும் பிரகாசிக்க வேண்டும் என்ற மரபு முறையில் நடாத்தப்படுவதாகும்.

**காது குத்துதல் (கர்ணவேதனம்)**

குழந்தை பிறந்த ஆசௌசக் கழிவன்று அல்லது *6*ஆம், *7*ஆம், *8*ஆம், *10* ஆம் மாதங்களிலும் "காது குத்தல்" வைபவம் நடாத்தப்படும். இதற்கு பூஜை, கிரியை எனச் செய்ய வேண்டியதில்லை. பிள்ளையார் வைத்து, நிறைகுடம் வைத்து வணங்கிச் செய்தல் வேண்டும். இது குழந்தைகட்கு ஏற்படும் அரிட்ட தோஷ நிவர்த்திக்காகவும் தமிழர் பாரம்பரிய கலாசாரங்களைப் பேணுவதற்காகவும் செய்யப்படுகிறது.

**ருதுசாந்தி**

ஒரு பெண் குழந்தை பிறந்து, வளர்ந்து, பருவமடைந்து, இல்வாழ்கைக்கும், தாய்மைக்கும் தகுதியுடைவளாய் மாறும் நாளே பூப்படைதல் எனப்படும். பெண் பூப்படைந்து ஒற்றைப்பட்ட நாளில் சுப தினத்தை எடுத்து அந்நாளில் சுத்தி புண்ணியாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து பால், அறுகு வைத்து நீராடி கண்ஊறு கழியும் பொருட்டு நிறைக்கும் நிறை நாளில் பிட்டுக் கூம்பு, திருஷ்டி உருண்டை, குத்துவிளக்கு போன்றவற்றால் திருஷ்டி கழிப்பது மரபு. இக்கருமம் எல்லா மாதங்களிலும் செய்யலாம். ருதுவான தினத்தில் இருந்து ஒற்றை நாள் வரும் சுப தினத்தில் இக் கருமம் செய்தல் வேண்டும். ஒரு மாதத்துள் இவ் வைபவம் நடாத்தப்படுவதே சிறப்பு.

## திருமணம்

மானிடப் பிறப்பு எடுத்ததிற்கு அர்த்தபுஷ்டியாய், அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நாற்பயன்களை அடைவதற்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடி கொள்வது "திருமணம்" என்கின்ற இரு மனம் இணையும் இனிய நாளாகும்.

### திருமணத்திற்கு முன் நிகழ வேண்டிய கருமங்கள்

#### நிச்சயதார்த்தம்

பருவமடைந்த ஆண், பெண் ஆகிய இருவரின் ஜாதகப்படி விவாகப் பொருத்தம் உரிய சோதிடர் மூலம் முறைப்படி பார்த்து பொருத்தம் நிச்சயம் பண்ணிய பிற்பாடு பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்கு நன் நாளில் சென்று தாம்பூலம் பரிமாற்றம் செய்தல், அதாவது மங்கலப்பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழவகைகள், இனிப்பு பலகாரத்துடன் சென்று திருமணத்தை நிச்சயித்தல். அதன் பின் திருமண நாளை நிச்சயித்து விட்டு பின் பெண்வீட்டிற்கு மாப்பிள்ளை வீட்டாரும் சென்று மேற்கூறிய படி தாம்பூலம் மாற்றுவர். பின் பொன்னுருக்கல் வைபோகம் செய்தல். அதாவது மாங்கல்யம் (தாலி) செய்வதற்கு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டில் அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் செய்தல் வேண்டும். அதே நாள் அல்லது பின்பு பெண்ணுக்குரிய கூறைப்புடைவை போன்றவற்றையும் கடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நாளாகப் பார்த்து வாங்க வேண்டும். பின் திருமண நாளுக்கு மூன்று நாட்களுக்கு முன் முகூர்த்தக் கால் (அதாவது பந்தல் கால் அல்லது கன்னிக்கால் என்றும் சொல்வர்) ஊன்றுதல் நடைபெறுதல் வேண்டும். இது முள்முருங்கை மரத்தைப் பயன்படுத்தி சுமங்கலிப் பெண்களால் வீட்டு வளவில் ஈசான மூலையில் ஊன்றி நவதானியம் இடுதல். இதே மாதிரி பெண் வீட்டிலும் இடுதல் வேண்டும்.

**மாப்பிள்ளை அழைப்பு**

திருமண நாளன்று சுப நேரத்தில் தோழனுடன் பெண் வீட்டார் மாப்பிள்ளைவீட்டிற்கு சென்று, மாப்பிள்ளையை மணப்பந்தலுக்கு அழைத்து வருவர். (மாப்பிள்ளை வீட்டில் பால், அறுகு வைத்து மாப்பிள்ளைக்கு புனித நீராட்டுதல், தலைப்பாகை வைத்தல் போன்ற நிகழ்வுகளும், அதே போல் பெண்ணுக்கும் புனித நீராட்டுதல் நடைபெறும்.)

மணப்பந்தலின் முன்றலில் நிறைகுடம் வைத்து மங்கல விளக்கேற்றி வைக்க வேண்டும். எல்லாக்காரியங்களுக்கும் முதலில் நாங்கள் வணங்கும் விநாயகரை (பசுவில் சாணத்தில் அல்லது மஞ்சள் மாவில் பிள்ளையார் பிடித்து) எழுந்தருளச் செய்து மலர் சூட்டி மங்கலப் பொருட்களையும் வரவேற்புக்கு சந்தணம், குங்குமம், பன்னீர் முதலியவற்றையும் வைத்தல் வேண்டும். மாப்பிள்ளை தோழனுடன் வந்து சேர்ந்ததும், தோழன் மணமகனின் காலைக் கழுவுவார். தோழனுக்கு அன்பளிப்பாக மாப்பிள்ளை மோதிரம் போடுவது வழக்கம். இரு மங்கல மங்கையர் (சுமங்கலிகள்) ஆராத்தி எடுத்து திலகம் வைத்தும், மாமனார் மாப்பிள்ளைக்கு மலர் மாலை போட்டும் வரவேற்பது இன்னு மொரு வழமை. அதன் பின் மாப்பிள்ளையை தோழன் நிறைகுடத் துக்கு வலமாக அழைத்து வந்து மணவறையில் அமர வைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளையை வலது பக்கமாக அழைத்து வர வேண்டும். (அதாவது சிவாசாரியார் இருக்கும் பக்கமாக) முதலில் சங்கற்பம் பிள்ளையார் பூஜை, புண்ணியாகம், பஞ்சகவ்விய சுத்தி கிரியைகள் நடைபெறும்.

**பவித்திரம் அணிதல்**

திருமணக் கிரியைகளைச் செய்யவிருக்கும் சிவாச்சாரியார் தான் செய்யப்போகும் கருமத்திற்கு இறைவனிடத்தும் பெரியோரிடத்தும் அனுமதி வேண்டுதலைத் (அனுக்ஜை) தொடர்ந்து சங்கற்பம் (அதாவது செய்யப்போகும் கிரியைகளில் உள்ளத்தை உறுதி செய்து கொண்டு பவித்திரம் அணிதல்) இடம் பெறும்.

**விநாயகர் பூஜை**

உலகங்கள் யாவற்றிற்கும் முதற் காரணமான பொருள் மகா மாயை அல்லது பிரணவம் எனப்படும். அதற்குத் தலைமையாயிருக்கும் சிவசக்தி விநாயகராகக் காண்கின்றோம். எந்தக் கிரியையும் இனிது முடிப்பதற்கு மேலான தலைவராக விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி விநாயகர் பூஜை நடக்கும்.

**ஆசமனம்**

மூவகைத் தத்துவங்களையும் நினைத்து நீரை உட்கொள்ளல் உள்ளம் தூய்மையாகி ஆன்மா அருள் வழி நிற்க இக் கிரியை இடம் பெறும்.

**புண்ணியாகம்**

இடத்தையும் பொருளையும் சுத்தி செய்யும் கிரியையை பஞ்சகவ்வியம் கொண்டு செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்குரார்ப்பணம்.

அங்குரார்ப்பணம் எனப்படுவது முளைப்பாலிகை (நவதானிய முளை) இடுதல். (அங்குரம் - முளை), அங்குரார்ப்பணம் - முளையிடுதல்) மூன்று தினங்களுக்கு முன் ஐந்து சிறிய மண் சட்டிகளில் மண் இட்டு நவதானியங்களை சுமங்கலிகள் விதைத்து தினமும் நீர் வார்த்து திருமண மண்டபத்திற்கு கொண்டு வருவர். இது படைத்தலைக் குறிப்பதாகும். இதில் சக்தியம்சம் பெற்ற சந்திரன்பூஜிக்கப்படுவது மரபு. குறிப்பாக பயிர்கள்நவதானியங்கள் எனப்படும் தாவரங்களுக்கு அதிபதி சந்திரன் எனவே சந்திர கும்பத்தைச் சுற்றி வைத்து, மேற்கூறிய கணக்கில் ஐந்து அல்லது மூன்று சுமங்கலிப் பெண்களை (மணமகள், மணமகன் இரு வீட்டாரும் சேர்ந்து) வரவழைத்து அவர்கள் கையால் முளைப் பாலிகையைச் சட்டியில் இடுவதே அங்குரார்ப்பணம். மங்கலக் கிரியை வைபவங்கள் அனைத்திலும் இது உண்டு. திருமணத்தில் இதைச் செய்வதின் பொருள், சந்ததி பெருகும் பொருட்டும், நவதானியம் எனப்படும் முளைப்பாலிகைகள் மனிதனால் விதைக்கப்பட்டு மனிதன் தேவைக்கே பயன்படுவது போல, இல் வாழ்க்கையில் கணவர், மனைவி மற்றறோருக்கும் தம்மால் இயன்ற உதவி புரிந்து அறத்தோடு என்றும் பாலிகை இடும் சுமங்கலிகள்போல் மங்களமாய் வாழ வேண்டும் என்பதற்காகவே.

## இரட்சாபந்தனம்.

இதைக் காப்புக் கட்டுதல் எனக் கூறுவதுண்டு. (இரட்சை - காப்பு, பந்தனம் - கட்டல்) மணமகன் மணமகள் இருவருக்கும் தனித் தனியாக இந்தக் காப்புக் கட்டப்படும் அதாவது எடுத்த கருமம் இடையூறின்றி இனிது நிறைவேறவும், வேறு செயல் சிந்தனையின்றிக் குறித்த கரும சிந்தனையில் மூழ்கியிருக்கவும், எல்லாப் பாவங்களையும் நீக்கி புனித மயமாக்க (ர - எல்லா, ட்சா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபநாசம்) இந்த ரட்சாபந்தனம் செய்யப்படுகின்றது.

மணமகனுக்கு ரட்சாபந்தனம் (காப்புக்கட்டி) முடித்து, பிறிதொரு இடத்தில் இருத்தி பெண்ணை அழைத்து வருவார்கள். சில இடங்களில் மணமகன் அப்படியே இருக்க பெண்ணை அழைத்து வருவதுமுண்டு. இதற்குரிய காரணம் பெண்ணுக்கு காப்பு கட்டாமல் மணமகனைப் பார்க்க கூடாது என்கின்ற ஒரு நியதியில் மணமகனைப் பிறிதொரு இடத்தில் அமரச் செய்கின் றனர். ஆனால் பெண் அழைத்து வரப்படும்போது முகத்திரை போட்டே அழைத்து வருவதால் மணமகன் மணவறையில் இருக் கவே பெண்ணையும் வைத்துக் காப்பு கட்டலாம் என்கின்ற மரபிலும் இரு விதமாய் இக்கிரியை செய்வதுமுண்டு. மாங்கலியம் பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் வரை லஷ்மி, நாராயணராக மணமகனையும் பெண்ணையும் பாவனை செய்து தாலி கட்டிய பின் சிவசக்தி ரூபமாக அமர்த்தி கிரியை நிகழ்த்துவர். அதற்காகவே முதலில் பெண் வலது பக்கமும் தாலிகட்டிய பின் ஆண் வலமாகவும் பெண் இடமாகவும் மாற்றி இருத்துவார்கள். விஷ்ணு தனது வலது மார்பிலேயே லட்சுமியை கொண்டுள்ளார். சிவன் தனது உடம்பின் இடது பாகத்தைச் சக்திக்கே கொடுத்துள்ளார் என்கின்ற தத்துவம் இதனைப் புலப்படுத்தும்.

### கும்ப பூசை

இரட்சாபந்தனமான பின்னர் ஆசாரியர் முறைப்படி சிவனதும் சக்தியினதும் அருளைப் பெறுவதற்காக சிவகும்பத்திற்கும் சக்தி கும்பத்திற்கும் பூஜை செய்து வழிபாடு நடத்துவர்.

### நவக்கிரக பூஜை

வாழ்க்கைக்கும் நவக்கிரகங்களுக்கும் தொடர்புண்டு. எனவே அவற்றால் வரும் குற்றங்களைப் போக்கி அருளும்படி நவக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகத்திற்கு செய்யும் பூஜை அடுத்து இடம் பெறும்.

### ஓமம் வளர்த்தல்

கும்பத்திலே பூசித்த யாகேசுவரர் (சிவன்) யாககேசுவரி (சக்தி) யின் அருளை நிலைபெறச் செய்வதற்காக ஓம குண்டத்தில் அக்கினி காரியம் செய்யப்படும் இங்கு வளர்க்கும் அக்கினி சிவாக்கினி எனப்படும். சிவாக்கினி பாவங்களை எரித்து வாழ்க்கைக்கு வேண்டிய தூய அருளை நல்கும்.

### பிதுரர் ஆசீர்வாதம்

குடும்ப வாழ்வைத் தொடங்கும் போது அது தவறின்றி நடப்பதற்கு அக் குடும்பத்து முன்னோரது ஆசீர்வாதம் வேண்டும். அதற்காக முன்னோராகிய பிதுரர்களை திருமணத்திற்கு அழைத்து அவர்களது ஆசியைப் பெறும் வகையில் செய்யப்படும் சிரார்த்தம் அடுத்த கிரியை ஆகும். மணமகன், மணமகள் ஆகியோரின் தந்தையர்களினால் இது செய்யப்படும்.

### கன்னிகாதானம்.

பெண்ணை முறையாகப் பெற்றோர்களால் "தாராதத்தம்" செய்யப்படும். ஒரு பொருளை இறுதியாகக் கொடுப்பதற்குத் தண்ணீர் விடுதல் முன்னாள் மரபு. இதற்குரிய கிரியை ஆனது மணமகன், மணமகள், இருபகுதிப் பெற்றோரையும் அழைத்துச் சங்கல்பம் செய்து அவர்களுடைய சந்ததி, வம்சாவழிப் பிதுரர்களை நினைவு கூர்ந்து திருப்தியுறும் வகையில் நாந்திதானம் (அரிசி, மரக்கறி உட்பட பணம் வைத்து) நவக்கிரக பரீதனம் (வஸ்திரம், பணம்) போன்றவற்றைக் குருக்களுக்கும் உதவிக் குருமாருக்கும் தானமாக மேற்குறிப்பிட் வண்ணம் செய்த பின் கன்னிகாதானம் இடம் பெறும். அதற்கு முன் சமபந்திகள் ஒருவருக்கொருவர் உபசாரஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் (இது கிரியை முறையில் சொல்லப்படவில்லை சபைச் சிறப்பிற்காகச் செய்யப்படும் ஒரு சிறப்பாகும்) அதன் பின் கிழக்கு முகமாய் (மணவறையிலிருந்து சபையோரைப் பார்க்கும் வண் ணம்) மணமகளின் தந்தை அமர்ந்து ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம், தேங்காய், மஞ்சள் துண்டு, சில்ல றைக் காசு, பொன், மலர் போன்ற பொருட்களை தட்டடில் வைத்து பெண்ணின் கையைத்தட்டிலே வைத்து தந்தை தட்டையும் மகள் கையையும் சேர்த்துப் பிடிக்கச் சிவாசாரியார் மணமக்களின் வம்சாவழியை (மணமகளினதும், மணமகனினதும், தந்தை, தந்தையின் தந்தை, பேரன், அவரின் தந்தை (பாட்டன்) ஆகியோரின் பெயர்க ளைக் குறித்து சிவாச்சாரியாரிடம் திருமணக் கிரியைகள் தொடங்க முன் கொடுத்து வைப்பது உசிதம்). சபையோர் அறிய எடுத்துக் கூறி மங்கள ஸ்லோகம் கூறித் தாயார் மூன்று முறை தண்ணீர் விட மங்கள வாத்தியங்கள் முழங்க கன்னிகையைத் தானமாக மனமகன் கையில் கொடுப்பார். (கையிலே தண்ணீர் விடுதல் என்பது ஒரு பொருளை இறுதியாகக் கொடுப்பதற்கு முற்காலத்தில் அறிகுறியா யிருந்தத. நிலம் முதலியவற்றை விற்கும் பொது இவ்வாறே நடந் தது. தண்ணீர்த் தாரையோடு கொடுத்தலால் இதற்குத் தாராதத்தம் என்பர். தத்தம் - கொடுத்தல்)

### தாலிகட்டல்

தாலியிலே சிவலிங்கம் விநாயகர் அல்லது லஷ்சுமியினுடைய திருவுருவம் அமைத்தல் சிறந்தது. அதன் பின் ஒரு தட்டிலே மாங்கல்யம், கூறை, மாலை, வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், எலுமிச்சம்பழம், கால்மிஞ்சி மற்றும் மங்களப் பொருட்கள் வைத்து மணமகனின் தந்தை, தாய் சபையோரிடம் ஆசி பெறுதல். பின் மணமகன் தனது கையால் மணமகளிடம் கொடுத்து கூறை மாற்றி வரச் செய்தல் இடம் பெறும். கூறை மாற்றி வந்ததும் மணப்பெண் மணமகனுக்கு வலப்பக்கம் வந்து அமர மாங்கல்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜை செய்து மணமகன் எழுந்து வலது பக்கத்திற்கு வந்து சிவாசாரியார்கள், அவையோர் ஆசீர்வதிக்க கெட்டிமேளம் முழங்க கழுத்தில் தாலி கட்டுதல் நடைபெறும். மங்கள நாண் பூட்டுதல் என்றும் இதைக் கூறுவர். அதன் பின் மணமகள் மணமகனுக்கு இடப்பக்கம் அமர்வாள். ஆதிகாலம் மஞ்சட் கயிற்றிலேயே தாலி கட்டப்பட்டு வந்தது. தற்போது தங்கத்திலேயே கட்டுகின்றனர். இருப்பினும் சில குடும்பத்தினர் இன்றும் "மஞ்சட் கயிறு" மாங் கல்யத்திற்கு பாவிப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் பெரும் பாலும் மஞசட் கயிறே அணிகின்றனர். மஞ்சட்கயிற்றுத் தாலியே கட்டுகின்றனர் என்று கூறப்படுகின்றது. மாங்கல்யம் ஒன்பது இழை களை உடையது.

1. வாழ்க்கையை உள்ளபடி புரிந்து கொள்ளுதல்
2. மேன்மை
3. ஆற்றல்
4. தூய்மை
5. தெய்வீக நோக்கம்
6. உத்தம குணங்கள்
7. விவேகம்
8. தன்னடக்கம்
9. தொண்டு

இவற்றை ஒரு பெண் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மாங்கல்யம் அமைக்கப்பட்டுள்ளது.

சுப முகூர்த்தத்தில் மணமகன் மணமகளின் வலப்புறம் சென்று வடக்கு நோக்கி நின்று சிவசக்தியை நினைத்து வணங்கிக் கொண்டு மாங்கல்யத்தை இரு கரங்களாலும் பெற்று கெட்டிமேளம் முழங்க வேதநூற் துணிபுடனாகி வாழ்த்தி நிற்க பெரியோர்களும் சுமங்கலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் மலர் தூவி வாழ்த்த ஒரு சுமங்கலி திருவிளக்கு ஏந்தி நிற்க மணமகன் மணமகளின் கழுத்தில் மங்கல நாணைக் கட்ட வேண்டும். தாலிக்கும் மணமகளுக்கும் மணமகன் திருநீறு பூசி பின் பெண்ணுக்கு குங்கும திலகம் வைப்பார்.

### மாலை மாற்றுதல்

அதன் பின் பெண் இடப்பாகமாகவும் ஆண் வலப்பாகமாகவும் மாறியிருந்து உமாமகேஸ்வரப் பாவனையாக கிரியை நிகழ்த் தப்படும். தாலி கட்டி முடிந்த பின் மாலை மாற்றுதல் வாழ்க்கையில் உடலாலும் உள்ளத்தாலும் நாமிருவரும் ஒருவரே என்ற தத்துவத் திற்கேற்ப பெண்ணின் கழுத்தில் இருக்கும் மாலை ஆணுக் கும், ஆணின் கழுத்தில் இருக்கும் மாலை பெண்ணிற்குமாக மூன்று முறை கழற்றி மாற்றுவார்கள்.

### பால் பழம் பருகுதல்

வாழ்க்கைத்துணை ஒருவருக்கொருவர் அமைந்த வேளை வாழ்க்கை என்றும் இனிப்பாக அமைய முதல் பானமாய் பாலும் பழமும் பருகுதல். அதன் பின் மங்கள தரிசனமாக கன்னிப்பசுக்கன்று காண் பிப்பார்கள். (பசுக்கன்று வசதியற்ற இடங்களில் "திருவிளக்கு" தரிசனம் செய்யலாம் என்பது மரபு)

### ஏழடி நடத்தல் (ஸப்தபதி)

மணவறை முன் இருக்கும் கும்பங்களையும் அக்கினியையும் சுற்றி வருவதற்காகவும் முதல் எழடி நடத்தல். அக்கினி எரியும் ஹோம குண்டத்தில் இருந்து அம்மி வரை ஏழு இடத்தில் நெல் போட்டு அந்த இடத்தில் பெண்ணின் வலக்காலைத் தூக்கி வைத்து நடத்தி வருதல். "ஸப்தம்" எனக் கூறப்படுவது 7 எனப்படும். ஸப்தஸ்வரங்கள் 7, ஸப்த ரிஷிகள் 7, ஸப்த ஸாகரங்கள் 7, ஸப்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகங்கள் 7, ஸப்த நாடிகள் 7, ஸப்த கன்னிகள் 7, ஸப்த வாரங்கள் 7 எனக் குறிப்பிடப்பட்ட அனைத்தும் ஞானிகளால் வகுக்கப் பட்டன. இவை வாழ்க்கையின் நடைமுறைக்கு முன்னுதாரணமா கவும் செயற்படவும் கேட்கவும் ரசிக்கவும் உதவுவன. கணவனா னவன் தனது இஷ்டங்களுக்குப் பிரியமானவனாய்த் தன்னைச் சார்ந்தவனாய் இந்த ஏழடி மூலம் தன்னோடு சேர்த்துக் கொள்வதே இதன் பொருள்.

இல்வாழ்வில் பெற வேண்டிய ஏழு பொருட்களை இது குறிக்கும். அவற்றைப் பெறுவதற்கு இருவரும் ஒத்து முயற்சி செய்ய வேண்டும். ஏழு பொருட்களுமாவன. உணவுப் பொருள், உடற் பலம், கடவுள் வழிபாட்டுடன் நல்வினை, மனச்சாந்தி, நல்லறிவு, சகல போகங்களும் காலத்திற்கு காலம் வரும் பொருட்க ளும் அவற்றால் வரும் சுகங்களும் யாகத்திற்கு வேண்டிய துணை களும்.

ஓரடி கடவுளுக்காக என்றும் இரண்டாவதடி கணவனுக்காக என்றும் மூன்றவதடி சேர்ந்தோர் குலத்தைக் காக்கவென்றும், நான்காவதடி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் பெண்களின் குணநலன்களைப் பேணுவதென்றும், ஐந்தாவதடி இருவரது அறிவு நல்லறிவாக அமைய வேண்டும் என்றும், ஆறாவதடி சுவைகளாறும் அன்புக் கணவனுக்குப் பொருந்தும் வரை ஊட்டப்பட உரியன என்றும் ஏழாவதடி ஏழேழு பிறப்பும் கணவருடன் இன்புற்று வாழ வேண்டும் என்றும் இக்காலப் பாடல் ஒன்று ஏழடி வைப் பிற்காக பொருள் விளக்கத்தை தருகின்றது. என்றும் ஒரு நூலாசிரி யர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏழடி நடந்த நாமிருவரும் இணைந்து ஏழு செல்வங்களையும் ஈட்டுவோமாக இன்ப துன்பங்களில் சேர்ந்து அனுபவிப்போமாக என உறுதி பூணுகின்ற கட்டமிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மி மிதித்தல்

நான்கு மூலைகள் கொண்ட ஒரு கல்லை (அம்மி) வைத்து அதன் மேல் பெண்ணின் காலைத் தூக்கி வைத்து தனது கையால் கணவன் மிஞ்சியைப் பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலில் அணிவது முறை. கல்லிலே உள்ள நான்கு விட்டங்களும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கின்ற நால்வகைக் குணவியல்புகளைக் குறிக்கும். அதன் நடுப்பகுதியில் கணவன் பெண்ணின் காலைத் தூக்கி வைக்கும் போது இந்தக் கல்லைப்போல் உறுதியாய் தன்நிலையில் நின்று பிரியாது இளகாது தனது கணவன் மேல் உள்ள பற்றும் நீங்காது கற்புநெறியில் நின்று விலகாது தன்னை உறுதியாய் நிலைப்படுத்த வேண்டும் என்பது பொருளாகும். அதன் ஞாபகம் வாழ்க்கையில் என்றும் இருக்கவே தினமும் நடக்கும் போதும் கால்மிஞ்சி ஞாபகமூட்டும் என்பதாகும்.

## பிராயச்சித்தம்

குற்றம்குறைகள் தீர்ப்பதற்காகப் பிராயச் சித்த ஓமமும் கிரியை களில் நிறைவு பூரணாகுதியும் நடைபெறும். தோழன் நெற்பொரி யைப் பெற்று மணமகனின் கையில் கொடுக்க மணமகன் தான் பெற்ற பொரியை மணமகளின் கையில் கொடுத்து மணமகள் அதனை இரண்டு கைகளாலும் ஏற்றுக் கொள்ள மணமகன் மணமகளின் கைகளை தன் இரு கைகளாலும் தாங்கி குருக்கள் அக்கினியில் சிருக்ஸ்ருவம் (யாககுண்டத்தில் நெய் சொரிவதற்காக மரத்தால் செய்யப்பட்ட யாழி போன்ற முன் பகுதி உடையது) மூலம் நெய் சொரியும் போது அக்கினியில் இடுவர். "அக்கினி பகவானே சகல செல்வங்ளையும் எமக்கு தந்தருள வேண்டும்" என வேண்டுதல் செய்து (ஒரு நூலாசிரியர்சிறப்பாக நென் மலர் என்று வர்ணிக்கின்ற) நெற்பொரியைச் சொரிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அருந்ததி பார்த்தல்

கற்பு நெறியில் மிகச் சிறந்தவளாய் விளங்கியவள் அருந்ததி எனும் மங்கை. அவளின் சிறப்பினால் வானிலே நட்சத்திரமாக இன்றும் ஜொலித்துக் கொண்டிருக்கிறாள். பெண்ணின் கற்பு நெறி பெருமையை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசை பார்த்து நமஸ்காரம் செய்வது மரபு. சிலஇடங்களில் அருந்ததிக்கெனக் கும்பம் வைத்து கும்பத்திலே பூ போட்டு வணங்குவதுமுண்டு. இரவுவேளை எனின் வானில் நேரடியாகவே அருந்ததியைத் தரிசனம் செய்ய முடியும்.

“அண்டல மீதுலவும் அருந்ததி என்னும் அருந்திறற் கற்பினாள் உன்னை கண்டதால் ஊறு படவொணாதென்னக் கருதி நீ கங்குலிற் கவிகை கொண்டது முறை தான் “ என்று புகழேந்திப் புலவர் பாடியது இத்தொடர்பில் ஒரு நூலாசிரியர் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

### மோதிரம் போட்டு எடுத்தல்

இது கிரியையிலே கூறப்படவில்லை. மணமக்களுக்கு கூச்சம் தெளியவும் சபை சிறப்புக்காகவும் செய்யப்படுகின்றது. மஞ்சள் கலந்த நீரில் மோதிரமும் ஏலுமிச்சம் பழமும் போட்டு இருவரும் ஒரே சமயத்தில் கைவிட்டு எடுக்க வேண்டும். ஒருவர் மோதிரத்தை எடுத்தால் மற்றவர் வெறுங்கையை எடுக்கக் கூடாது என்பதற்காக எலுமிச்சம் பழமும் சேர்த்துப் போடப்படுகின்றது. இம்முறை மூன்று தடவை நிகழும். மணமகன் மோதிரத்தை எடுத்தால் மறுதடவை பெண்ணுக்கு மோதிரம் எடுக்க விட்டுக்கொடுக்க வேண்டும். மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். என்ற தத்துவத்தை இது குறிக்கிறது.

### அரசாணி

விவாகத்தில் நான்கு கும்பங்கள் நான்கு தீபங்களுக்கு மத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாணி வைக்கப்படுகின்றது. அதுவும் முள்முருக்கமரம் நாட்டி முள்ளிருக்கும் பகுதியை வெள்ளைத் துணியால் மூடிக்கட்டி அவ்விடத்தே நடுவில் நாட்டப்படுகின்றது. விவாகத்தில். உள்ள கிரியைகள் மணமக்களின் கற்பு நெறியை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. இந்த அரசாணியின் தத்துவம் மணமகனை மட்டும் வலியுறுத்துவதாக அமைகிறது. தேவசபையில் இந்திரன் அகலி கையை விரும்பியதால் முனிவரின் சாபத்திற்கு உட்பட்டு உடல் முழுவதும் யோனி வடிவாக ஆகும்படி சபிக்கப்பட்டான். பின் பிழையை உணர்ந்த இந்திரன் மன்னிப்புக் கேட்டு வேண்டிய பொழுது உடலில் யோனி உள்ள இடமெல்லாம் கண்களாக கடவது என சாபத்தைக் குறைத்தார். முள் மரம் முழுவதும் முள்ளிருக்கும் அம் முட்களை கண்களாக கருதி அதைத்துணியால் மூடி அவ்வி டத்தே மணமகனுக்கு அதைத் தரிசிக்கச் செய்து கற்பு நெறி ஆணுக்கும் உண்டு அக்கற்பு நெறி தவறியதால் இந்திரன் சாபத் திற்கு உட்பட்டான். எனவே கற்பு நெறி தவறாதிருக்க விவாகத்தில் இந்த வலியுறுத்தலும் முக்கியமாகக் கருதப்படுகின்றது. இதுவே அரசாணியின் தத்துவமாகும்.

**வாழ்த்துதல் (அறுகரிசி போடுதல்)**

இந்த நிகழ்வு மணமக்கள் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ வேண்டும் எனப் பெரியோர்கள் மனமுவந்து ஆசீர்வதிப்பதாகும். அறுகானது நன்றாகப் பரவும் தன்மையும், இலகுவில் அழியாத தன்மையும் உடையதாய் மணமக்கள் இருவரும் அதே தன்மை யோடு சிறப்புற்று வாழ வேண்டும் என்ற நோக்கில் அறுகைச் சேர்த்து மஞ்சள் கலந்த அரிசி போடுதல் அறுகரிசியாக வாழ்த்துவது மரபாகும். இவ்வாறு அரிசி போடுவதில் மாறுபட்ட தன்மையைக் காண முடியும். சிலர் கீழ் இருந்து மேல்நோக்கியும், சிலர் மேலி ருந்து கீழ் நோக்கியும் ஆசீர்வதிப்பதுண்டு. இதில் சரியான முறை உச்சியில் (சிரசில்) மட்டும் மூன்று முறை இடுதலே ஆகும்.

நிறைவு - மகிழ்வு - வெற்றி குறித்துப் பண்டை நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகெடுத்து வாழ்த்தும் வழக்கம் இருந்து வந்தது. (சேக்கிழார் பெரிய புராணம் பாடி முடித்து யானை மீதமர்ந்து வீதியுலா வரும் போது ஆரணங்கள் விரித்தோதி மாமறையோர் எதிர் கொண்டு அறுகெடுப்ப வாழ்த்தெடுத்தார். (அரம்பையர்கள் எல்லாம் என்பது திருத்தொண்டர் புராண வரலாறு - 88) அறுகிட்டு வணங்குதல் என்ற மரபு காலப்போக்கில் அறுகொடு நெல்லும் மலரும் கலந்திடுதல் என்று ஆயிற்று. நெல் மலரும் கலந்து இட்டு வாழ்த்துதல் அட்சதையிடுதல் என்று உலகியல் வழக்கில் வழங்கக் காண்கின்றோம்.

## ஆரத்தி எடுத்தல்

திருமண நிகழ்ச்சியின் நிறைவாக மணமக்களின் கைகளில் கட்டிய காப்புக்களை அவிழ்த்து வைத்து விட்டு பின் பவித்திரங்களை கழற்றி வெற்றிலையில் வைத்துக் குருக்களுக்கு தட்சணையும் சேர்த்துக் கொடுத்து மணமக்கள் ஆசீர்வாதம் பெறுவர். திருமணச்சடங்கின் முடிவில் ஆரத்தி எடுத்தல் இடம்பெறும். மணமக்களுக்கு "கண்ணூறு" (கண் திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி அதன்மேல் மூன்று வாழைப்பழத் துண்டுகளில் நெய்தீபம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்று முறை சுற்றித் தீபத்தை அணைத்து மணமக்களுக்கு அக்குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டுவிடுதல் நிகழும்

ஆரத்தி எடுத்த பின் தோழன், மணமகன், மணமகள், தோழி என்ற வரிசையில் மங்கள மேளம் முழங்க எல்லோரும் வாழ்த்த வீட்டினுள்ளே வலது காலை எடுத்து வைத்து மணமக்கள் செல்வார்கள். அவர்களுக்கு முன்னே பூரண கும்பம், மங்கள தீபம் என்பவற்றை சுமங்கலிப் பெண்கள் கொண்டு செல்வர். வழிபாட்டறையில் அவற்றை வைத்து மணமக்கள் பெற்றோரின் ஆசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அபரக் கிரியை

அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யும் கிரியை ஆதலால் இது அபரக் கிரியை என்று பெயர் பெறுகிறது. அபரக்கிரியை உத்திகிராந்திக் கிரியை முதல் வருட சிரார்த்தம் வரை பல கிரியைகளை உடையனவாம். இங்கே கூறப்படும். கிரியைகள் யாவும் சமய தீட்சை பெற்றவர்களுக்கு மட்டுமே செய்யப்படுவதாகும். சமய தீட்சை இல்லாதவர் கட்கு மந்திரமல்லாது, திருமுறையுடன் கிரியை செய்ய வேண்டும். அதனால் எல்லோரும சமய தீட்சை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**உத்திராந்திக் கிரியை**

ஒருவர் உயிர் பிரியும் நிலை அடையும் போது (மரண வேளை) சுற்றத்தவரிடத்தும், பொருள் இடத்தும் உள்ள பற்றை நீக்கி விபூதி பூசிச் சிவபெருமானைத் தியானித்து தேவாரம், திருவாசகங்களைச் சிவனடியாரைக் கொண்டு பாடக்கேட்க வேண்டும். இவ்வேளை (பசு) கோதானம் செய்வது சிறந்ததாகும்.

அவருடைய மகன் அல்லது சுற்றத்தவருள்ளே சமய தீட்சை உடையவன் மனம் கலங்காது புண்ணிய தலத்து விபூதி பூசி அவர் உடம்பில் வில்வத்தடி மண்பூசி, அவர் வாயில் கங்கா தீரத்தம் விட்டு அவர் தலையைத் தம்மடி மீது வைத்து அவர் செவியில் பஞ்சாட்சரத்தை உபதேசித்து செவியைக் கையினால் மூட வேண்டும். உயிர் நீங்கிய பின் உடலைச் சுத்தி செய்து அலங்காரம் செய்த நிலத்தைத் தூய்மைப்படுத்தித் தர்ப்பை பரப்பி தெற்கே தலை இருக்கத்தக்கவாறு கிடத்தவும். காற்பெருவிரல் இரண்டையும் துணியினால் கட்டி விடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல் கைப்பெருவிரல் இரண்டையும் சேர்த்து கட்டவும். வாயைத் தலையுடன் சேர்த்துக் கட்டிவிடவும். உப்பைப் பொட்டல மாகக் கட்டிப் பிரேதத்தின் மீது வைத்தலும் பிரேதத்திற்குக் கீழே நீர் நிரப்பிய பாத்திரம் வைத்தலும் உண்டு. உடலை வெள்ளைத் துணியால் முழுமையாய் மூடிவிடவும். தலைப் பாகத்தில் குத்து விளக்கு ஏற்றி வைக்கவும். மனைவி, மக்கள், சுற்றத்தவர் அருகில் இருந்து, தேவார திருவாசகங்களை பக்தியுடன் ஓத வேண்டும்.

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களும் தனிஷ்டா பஞ்சமி எனப்படும். இப்பஞ்ச மியில் ஒருவர் இறந்தால் இதற்கு தானம் சாந்தி செய்யின் தோஷம் நிவர்த்தியாகும்.

## சூர்ணோற்சவம் (வீட்டில் நடைபெறும் கிரியை)

இறந்தவர் வீட்டு முற்றத்தில் பந்தல் அமைத்து, வெள்ளை கட்டி, மாவிலை, தோரணம் கட்டல் வேண்டும். இங்கு அமைக்கும் பந்தல் தட்டைப் பந்தலாயும் மேலே வேயப்படும் ஓலை பச்சை ஓலையாகவும் இருக்க வேண்டும். வீட்டு வாயிலிலே மொந்தன் வாழைகுலையுடன் கட்டல் வேண்டும். நிலத்தைப் பசுஞ் சாணத் தால் மெழுகி மண்டபத்தை மூன்றாகப் பிரித்து மாக்கோலமிட்டு, மண்டபத்தில் மேற்கே நடுவில் சிவகும்பமும், சூழ எட்டுக் கும்பமும் வைக்கவும். இறந்தவர் சமய தீசஷதராயின் உருத்திர மூர்த்தியையும், விசேட தீசஷதராயின் ஈசுவரமூர்த்தியையும், நிர்வாண தீசஷதர் ஆசாரி அபிடேகம் பெற்றவராயின் சதாசிவ மூர்த்தியையும், நடுக்கும்பத்திலும் சூழ உள்ள கும்பங்களில் ஈசானம் முதல் கிழக்கு வரை ஈசானம், குபேரன், வாயு, வருணன், நிருதி, யமன், அக்கினி, இந்திரன் ஆகியோரைப் பூசிக்க வேண்டும். நடுவே அக்கினி காரியத் திற்கென குண்டம் ஒன்று அமைத்து அதற்குக் கிழக்கே உரல் உலக்கையும் அதற்கு கிழக்கில் பேரிதாடனத்திற்காகப் பேரியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கவும் உரல், உலக்கைக்கு மாவிலை, கூர்ச்சம், கோடி வஸ்திரம் கட்டி மலர் மாலையால் அலங்கரித்து உரலினுள்ளே அறுகும், மஞ்சள் மாவும் இடவும். உரலைச் சூழ நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சைப்பழம், அபிடேகப் பொருட்கள் இறந்தவர் உடலுக்கு அணியும் உடு புடைவை என்பவற்றை வைக்கவும். உரலுக்குப் பக்கத்தே ஒரு கும்பம் வைத்து அதில் பாசுபதாஸ்திர தேவரைப் பூசிக்கும் படி காரணாகமத்தில் உள்ளது. சலத்தில் சுண்ணப் பொடியைக் குழைப்பர். குண்டத்திற்கு வடக்கே மண்குடத்தில் சுடலைக்குக் கொண்டு செல்லும் உருத்திர கும்பம் அமைத்தல் வேண்டும். ஸ்நபன கும்பத்திற்கு தெற்கே புண்ணியாவாகன கும்பத்தையும், பஞ்ச கௌவியத்தையும் அமைக்கவும்.

கிரியை செய்வோன் - தந்தைக்கு மூத்த மகன், தாய்க்கு இளைய மகன் கடமை செய்தல் வேண்டும். மகன் இல்லாத போது மனைவி, கணவன், மகள், சகோதரன், அவர் மகன், தந்தை, தாய், மருமகன், சகோதரி, சபிண்டன், சமானோதகன், சீடன், குரு, தோழன், அரசன் ஆகிய இவர்களுள் முன்னவர் இல்லாத இடத்தில் அடுத்தவர் கிரியை செய்யலாம். மகன், மனைவி, மக்கள் தவிர்ந்த ஏனையோர். கிரியை செய்யின் அவர்கள் தந்தை அல்லது தாய்க்கு கடமை செய்தவராய் இருக்க வெண்டும்.

கர்த்தா (கிரியை செய்வோன்) சவரம் செய்து நீராடி கோடி வஸ்திரம் இரண்டு அணிந்து அனுட்டானம் முடித்தல் வேண்டும். குருகர்த்தாவிற்கு விபூதி கொடுத்து பவித்திரம் அணியச் செய்து உபவீதம் இடமாக அணிவித்துச் சங்கற்பம் செய்து கொள்வார். விநாயக பூஜை புண்ணியாகவாசனம் முதலிய கிரியைகளைச் செய்து புண்ணியாவாகன பஞ்ச கௌவியத்தை மண்டபத்தில் தெளித்து இடத்தைச் சுத்தி செய்து நெற் பொரிகளை மண்டபத்தில் இறைத்துக் கொள்வர். இங்கு கர்த்தாவிற்கு பஞ்சகௌவியம் பருகக் கொடுக்கக் கூடாது. கிரியை நடைபெறும் போது திருமுறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களை ஓதுதல் வேண்டும். குரு அங்க நியாசம், கர நியாசம், சிவோகம், பாவனை செய்து ஸ்னபன கும்ப பூசை முடித்து, அக்கினி காரியம் முடித்து பூரணாகுதி கொடுத்து கிரியை பூர்த்தி செய்யப்படும். கர்த்தாவிடம் நெற்பொரி கொடுத்து அதைப் பிரேதத் தைக் குளிப்பாட்டுவதற்காக வீட்டின் பின்புறம் எடுத்துச் சென்று தலை தெற்காகக் கிடத்தி ஆசௌசிகள் அரப்பு எண்ணெய் வைப்பர். கர்த்தா மேற்கு முகமாக நின்று நல்லெண்ணெய் அரப்பு என்பவற் றைப் பிரேதத்தின் சிரசில் வைப்பர். பின்பு அரிசி மா, மஞ்சள் மா, பால், தயிர், இளநீர் அபிஷேகம் செய்து பின் பஞ்ச கௌவியம், கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா இடது கைமேல் வலது கையை வைத்துப் பிடிக்க வேறு ஒருவர் உதவியுடன் கர்த்தாவின் புறங் கையினால் அபிஷேகம் செய்ய வேண்டும். பின் அத்தர், பன்னீர் முதலிய வாசனைத் திரவியம் தெளித்து பிரேதத்தை அலங்காரம் செய்து மண்டபத்திற்கு கொண்டு வரவேண்டும். தலை தெற்கில் இருக்கக் கூடியதாக குருக்களுக்கு இடப்புறமாக வைத்து திருநீற்றை நீரில் குழைத்து சத்தியோசாதம் முதலான முழந்தாள் தொப்புள், மார்பு, நெற்றி, சிரசு, புயம் இரண்டு, முழங்கை இரண்டு, மணிக்கட்டு இரண்டு, விலா, முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரத்துடன் பூசி பன்னீரால் கைகழுவி நீரைப் பிரேதத்தின் சிரசில் தெளிக்கவும். இவ்வேளையில் திருநீற்றுப் பதிகம் ஓதல் வேண்டும். சந்தனம் குங்குமத் திலகமிட்டு பூமாலை சாத்தவும்.

**சுண்ணம் இடித்தல்**

பேரிதாடனம் செய்து அதன் பின் உரலில் தேவியையும் உலக் கையில் மேரு மலையையும் பூசித்து (வையகமெல்லாம் உரலாக மாமேருவென்னும் உலக்கை நாட்டி) அறுகு, மஞ்சள் மா என்பவற்றை உரலில் இட்டு எண்பத்தொருபத மந்திரம் சொல்லி மூன்று தரம் இடித்து பின் திருவாசகத்தில் உள்ள திருப்பொற் சுண்ணப்பாடல் பாடி இடித்தல் வேண்டும். பஞ்சபுராணம் பாடி நிறைவு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலையில் சுண்ணப்பொடியை எடுத்து உரலுக்குப் பக்கத்தில் உள்ள கும்ப நீர் விட்டுக் குழைத்து கர்த்தா நெற்றியில் (பொட்டிட்டு) அணிந்து, பிரேதத்தின் இரண்டு கண்களிலும் சாத்தி மிகுதியை உடல் முழுவதும் தெளித்து விடுக. சுண்ணம் இடிக்கும் போது இறந்தவரின் பேரப்பிள்ளைகள் முதலானோர் பிரேதத்தை சூழ நின்று பந்தம் பிடிப்பர்.

சுண்ணம் இடித்தல் பிரேத ஸ்நானத்திற்கு முன் நிகழ்வது தான் முறையானது. நம்மவர்கள் ஆசாரக் குறைவு கருதி பிரேத சுத்தியின் பொருட்டு சிவகும்பஸ்நானம் முடித்து அதன்மேல் சுண்ணப்பொடி தெளிக்கப்படுகிறது.

இறந்தவர் நற்கதி அடைய வேண்டித் தானம் கொடுத்தாலும், பிரேத யாத்திரையின் பொருட்டு யாத்திராதானமும் நிறைவு செய்து குருக்களுக்குத் தட்சணை கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், சுற்றத்தவர் (பெண்கள்) இடப்புறமாகச் சுற்றி வந்து வாய்க்கரிசி இடுவர். (வாய்க்கரிசி - பச்சை அரிசியும் தேங்காய் துருவலும் சேர்த்து) மனைவி, மக்கள் பிரேதத்தின் காலில் பூ போட்டு வணங்குவர். கணவன் இறந்தால் மனைவி தாலியை கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும். சுமங்கலி இறந்தால் நிறை தாலியை (தீபம், நெல்நிறைந்த சேர்) பிரேதத்தின் கையால் தொடச் செய்து வீட்டின் உள்ளே வைக்க வேண்டும். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றை சேலை முந்தானை யில் முடித்து விடவும். பிரேதத்தின் கீழே உள்ள துணியையும் மேலேஉள்ளதுணியையும்சேர்த்துபிரேதத்தைமூடிதலைப்பகுதியில் ஒரு முடிச்சிடவும். கீழே உள்ள ஆர்க்கை துணியால் மூன்றிடத்தில் கட்டவும்.

யாகத்திற்குரிய மரங்களில் பச்சை மரத்தில் கட்டப்பட்ட பாடை யில் பச்சைத் தென்னை ஓலைப் பன்னாங்கில் பிரேதத்தை வைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும். பாடை கமுக மரத்தால் கட்டப்படும். பெண்கள் பாடையை இடமாக மூன்று முறை சுற்றி வந்த பின் பிரேதம் மயானத்துக்குக் கொண்டு செல்லப்படும். காற்பக்கம் முன்பாகப் பிரேதத்தை எடுத்துச் செல்ல வேண்டும். கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல வேண்டும். கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல புகையுடன் கூடிய நெருப்பை மூன்று காலுடைய உறியில் வைத்து, குனிந்து தலையுடன் சுற்றத்தவர் பின்னேவர வாத்தியம், சங்கு ஒலிக்கத் திரு முறைப் பாடல்கள் பாடியவாறு அஸ்திர மந்திரங்களுடன் பொரி தூவியவாறு சுடலையை அடைந்து தலை தெற்கே இருக்குமாறு இறக்குக.

வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அந்த சிதாஸ்தானத்தில் தலை தெற்கே இருக்கப் பிரேதத்தை வைத்துச் சுற்றத்தவர் வாய்க்கரிசி போடவும். சுமங்கலி இறந்தால் அவரின் கணவன் முந்தானையில் முடிந்த தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றை எடுத்து வைத்து தேங்காயை உடைத்து தாலியை அவிழ்த்து (கழற்றி) எடுக்கவும். கர்த்தா சிவகும்பத்தை இடது தோளில் வைத்து இடப் புறமாகச் சுற்றிவந்து தலைப் பாகத்தில் வைத்து அதன் கழுத்துவரை உடைத்தெடுத்து கும்ப நீரில் அரிசியை நனைத்துக் காசுடன் தற்புருஷ மந்திரத்தால் வாய்க்கரிசி இடவும். குடத்தையும் கொள்ளியையும் கொண்டு இடமாக மும்முறை சுற்றி வரவும். ஒவ்வொரு முறையும் குடத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து ஒழுகும் நீரை சிதையில் தெளிக்கவும். தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று கொள்ளியை வைத்து குடத்தை முன்பக்கத்திற்கு போட்டு உடைக்கவும். பின் கால்மாட்டில் சென்று பவித்திரம், உபவீதம் என்பவற்றைக் கழற்றி சிதையில் போட்டு நமஸ்காரம் செய்து திரும்பிப்பாராமல் நீர்க்கரையை அடைந்து நீராடி நிவாபாஞ்சலி தருப்பணம் செய்து கொள்ளவும்.

நிவாபாஞ்சலி தருப்பணம் பிதிரர் பொருட்டு இருகைகளாலும் செய்யப்படும் சல தருப்பணமாகும். இது பாஷான உத்தியா பணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் செய்யலாம். சுற்றத்தவரோடு வீட்டு வாயிலுக்கு வந்து வேப் பிலை கடித்து உமிழ்ந்த பின் கைகால் கழுவி பின் நீராடி வீட்டைச் சுத்தம் செய்யவும். தூய்மையாய் தயாரித்த சோறு, கறி முதலிய வற்றை இறந்தவருக்குப் படைத்து தீபமேற்றித் திருமுறை பாடிய பின்னர் உரிமைக்காரருடன் உணவை உண்ணவும். ஆசௌசம் (ஞாதிகள்) அல்லாதோர் அங்கு உணவு உண்டால் அவ் ஆசௌசம் முடியும் வரை ஆசௌசம் காக்க வேண்டும். அந்தியேட்டி வரை தினமும் இரவில் தீபம் ஏற்றி நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் வைத்து திருமுறை பாராயணம் செய்தல் வேண்டும்.

### அஸ்தி சஞ்சயனம் (காடாத்து)

தகனம் செய்த அன்று அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாட்களிலும் எலும்புகளை எடுக்கலாம். அங்கு அக்கினி தணிந்திருந்தால் சிவாக்கினி மூட்டிப் பிராயச்சித்தம், ஓமம், தத்துவ ஓமம் செய்யவும். அக்கினி தணியும் வரை நீரை ஊற்றவும். அபி ஷேகப் பொருட்களால் காலில் இருந்து தலைவரை அபிஷேகம் செய்யவும். பின் சத்தியோசாதம் முதலாம் பஞ்சப்பிரம மந்திரங் களைக் கூறி முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, தலை ஆகிய இடங்களில் திருநீறு பூசி, சந்தனம், பூ முதலியவற்றைச் சாத்தி தூபதீபம் காட்டிய பின் முழந்தாள் முதலிய ஐந்து இடங்களிலும் சத்தி யோசாதம் முதலான மந்திரம் கூறி எலும்புகளை எடுத்து முக்காலி யில் உள்ள பால் நிரம்பிய பாத்திரத்தில் ஒலி உண்டாகாதவாறு போட்டு பாத்திரத்தின் வாயைக் கோடித் துணியால் மூடிக் கட்ட வும். மிகுதியுள்ள எலும்பு சாம்பலை அள்ளி, அவ்விடத்தைச் சுத்தி செய்து, பண்படுத்தி நவதானியம் விதைத்து பால் தெளித்து, குளிரப் பண்ணி வெற்றிலை, பாக்கு, பழம், நெற்பொரி, ரொட்டி, வடை (கோது நீக்கப்படாத உழுந்தில் செய்தது) முதலியவற்றை பூத பிரேத பைசாங்கங்களின் பொருட்டு நிவேதித்து திருமுறை ஓதி வழிபாடு செய்த பின்னர் எலும்பையும் சாம்பலையும் சமுத்திரம் முதலிய அன்னிய நீர் நிலைகளில் விடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்தி சஞ்சயனத்தின் போது கொண்டு செல்பவை

அரிசி மாவை பிசைந்து 7 ரொட்டிகள் செய்து கொண்டு போக வேண்டும். அத்தோடு பால், தயிர், மண்முட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை, தீவத்தி, பழவகை, இளநீர், பாக்கு, வெற்றிலை, பூஜைக்குரிய பொருட்கள்.

## தனிஷ்டா பஞ்சமி சாந்தி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் இறந்தால் தோசமுண்டு. இதற்கு சாந்தி செய்ய வேண்டும்.

வீட்டில் பூர்ண கும்பம், தண்ணீர், பசு தீபம் இவற்றை மூன்று நாள், இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது வைக்க வேண்டும். நீற்றுப் பூசணிக்காய் கட்டுதல் வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல் முதலியன நடைமுறையில் உள்ள வழக்கம். பிரேதத்தைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் பொது கமுகம் பிள்ளை ஒன்றும் பிரேதத்தோடு கொண்டு செல்லும் வழக்கமும் உண்டு. சனிக்கிழமை பிரேத தகனம் செய்ய நேரிட்டால் பிரேதத்துடன் கமுகம் பிள்ளை எடுத்துச் செல்வர்.

சுப நட்சத்திர வாரத்தில் பஞ்சமி சாந்தி செய்யப்படும். அல்லது அந்தியேட்டி அன்று இரவு சாந்தி செய்யலாம்.

ஆசாரியர் நித்திய கருமம் முடிந்த பின் புண்ணிய வாசனம் பஞ்சகௌயம் ஸ்தாசுத்தி செய்வர். பின் விக்கேஸ்வரரைப் பூசித்து யமன் பிரதிமையைத் தானம் செய்க.

எருமை வாகனத்துடன் யமனை வெள்ளி அல்லது செப்புத் தட்டில் வரைந்து சந்தணம், புஷ்பங்கள் சாத்தி சோடக பூஜை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பசு, சாணம், சலம் இவைகளை வைத்து இறந்த நட்சத்திர சாந்தி தானங்களைச் செய்க. அவிட்டத்திற்கு வெண்கலப் பாத்திரமும். சதயத்திற்கு எள்ளும், பூரட்டாதிக்கு வஸ்திரமும் (ஆடை) உத்தரட்டாதிக்கு வெல்லமும், ரேவதிக்கு வெள்ளியும் தானம் செய்க.

வீட்டின் நடுவில் இரண்டு படி நெல் பரவி ஒரு படி அரிசியும், அரைப்படி எள்ளும், காற்படி உழுந்தும் பரவி அதன் மேல் கும்பம் வைத்து அதில் லசஷ்மியை ஆவாகனஞ் செய்து லஷ்மி பிரதி மையை வைத்துப் பூசித்து கிழக்கு முதல் ஈசானம் வரை திக்கு பாலகர்களைக் கலசங்களிற் பூசித்து நைவேத்திய தூப தீபம் கொடுத்து அவரவர் மந்திரங்களை ஆயிரம் அல்லது ஐந்நூறாவது செபித்து கும்பத்திற்கு மேற்கே அக்கினி உண்டாக்கி, அதில் லஷ்மிக்கும் திக்குப் பாலகர்களுக்கும் ஆகுதி செய்க. நவக்கிரக ஓமம் செய்து, கர்த்தாவை கிழக்கு முகமாக இருத்தி கும்ப நீரால் அபிஷேகம் செய்து பஞ்ச கௌவியம் பருகக் கொடுக்கவும். பின் தானம் கொடுத்து ஆசாரியரை பூஜை செய்யவும். இது அபரக்கிரியா விதி வியாக்கியானத்திற் கூறப்பட்டது. இக்காலத்தில் நடைமுறை யில் உள்ள சாந்தி கீழ்வருமாறு:

அந்தியேட்டி அன்று இரவு வீட்டு முற்றத்தில் பந்தலிட்டு வெள்ளை கட்டி மாவிலை தோரணத்தால் அலங்கரித்து நிலத்தை மெழுகி சாந்தியை ஆரம்பிப்பர்.

விக்னேஸ்வரர் பூஜை புண்ணியாகவாசனம், பஞ்சகௌவிய பூஜை முடிந்து முற்றத்தில் (சுளகு) அரிசி மா, மஞ்சள் மா, கரிமா, இலை (பச்சை) மா, செங்கல் (சிவப்பு) மா இவற்றால் சிதாஸ்தான பதம் வரைந்து இதில் பஞ்ச தத்துவங்களையும் பூசித்து அரிசிமா அல்லது தர்ப்பையினால் செய்த புத்தளிகையை (உருவம்) வைத்து இறந்த நட்சத்திரத்திற்குரிய மந்திரங்களால் பூசித்து, அக்கினி உண்டாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுதி, பலி, பூர்ணாகுதி கொடுத்து நிறைவு செய்து, முற்றத்துடன் புத்தளிகையைச் சுடலைக்குக் கொண்டு சென்று தகனம் செய்து சாம்பலை நீர்நிலைகளில் கரைத்து வீட்டிற்கு வந்து நீராடி, அநுட்டானம் முடிந்த பின் சிவன், வர்த்தனி, லசஷ்மி, நவக்கிரக தேவர்களையும் பூசித்து கர்த்தாவிற்கு சிவன் வர்த்தனி கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின் தானம் கொடுக்கவும்.

வெண்கலமாயின், ஐந்து கலமும், எள் எனின் இரண்டு படியும், வஸ்திரம் எனின் இரண்டும், வெல்லமாயின் பத்து கலமும், வெள்ளி எனின் ஒரு கலமும் தானம் செய்யவும். அவிட்டத்திற்கு ஆறு மாதம் சதயத்திற்கு மூன்று மாதம், பூரட்டாதிக்கு ஒன்றரை மாதம், உத்தரட்டாதிக்கு ஒரு மாதம், ரேவதிக்கு பதினைந்து நாட்கள் தோசமாகும்.

## எட்டுச் செலவு

எட்டுச் செலவு என்ற கிரியை பத்ததி, ஆகமங்கள், ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லை. தேச வழமையில் உள்ள கிரியையாகும். இறந்த நாளில் இருந்து ஏழாம் நாளில் செய்யப்படும். தேவைகருதி ஐந்தாம் நாளில் செய்வதும் உண்டு. இறந்தவர் விரும்பி உண்ட உணவு வகை யாவும் படைக்கும் பேருணவுப் படையல் படைத்து தீபம் காட்டி அவ்வளவு வகைகளிலும் சிறு பகுதியை எடுத்து தீப்பந்தம் இளநீருடன் சந்தியில் வைக்கும் வழமை உண்டு. இது பகல் வேளைகளில் நடைபெறும். சில இடங்களில் இரவு வேளைகளில் நடாத்துவர். இதில் மாமிச உணவு, மதுபானம் என்பன படைத்தல் தவறு. இறந்தவருடைய ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும் போது கடமை செய்தவரும் வீடும் புனிதமாக இருக்க வேண்டும் என்பதால் 31 நாட்களும் மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும். எட்டுச் செலவு வரை வீட்டில் எண்ணெயில் பொரித்த உணவு வகைகள் தயாரிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேஷ்டி

அந்தியேஷ்டி என்பது இறுதியாக செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்தியேஷ்டியினால் சமய ஆசாரம், அனுட்டானத்தில் ஏற்பட்ட குறைகள் நிவர்த்தியாகும்.

அந்தியேஷ்டி சமய அந்தியேஷ்டி, விசேட அந்தியேஷ்டி, நிர்வாண அந்தியேஷ்டி என மூன்று வகைப்படும். இது சமய, விசேட, நிர் வாண தீட்சை உடையவர்களுக்கு அவாகள் பெற்ற தீட்சை வகையில் செய்யப்படும் விசேட, நிர்வாண, அந்தியேஷ்டியும் சைவ ஆசாரமுடைய புலால் உண்ணாத சமய தீட்சை உடைய சைவர்களுக்கும் செய்யப்படும் சமய அந்தியேஷ்டியும் பிரேதத்தில் சுடலையில் செய்யப்படும். ஏனையோருக்குச் செய்யப்படும் சமய அந்தியேஷ்டி ஆசௌச முடிவில் 31 ஆம் நாளில் செய்யப்படும் இதை இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் என்பர். மகன் தவிர்ந்த ஏனையோர் கடமை (கொள்ளி வைத்தல்) செய்தல் அந்தியெஷ்டி (தர்ப்பை சுடல்) நாள் பார்த்துதான் செய்ய வேண்டும். நந்தை, பத்தை, திரயோதசி தவிர்ந்த திதிகளும், செவ்வாய், வியாழன், வெள்ளி தவிர்ந்த வார லக்கினங்களும், திரிபாத நட்சத்திரம், தவிர்ந்த ஏனைய நட்சத்திரங்களிலும் பாபக்கிரகம் பலமுண்டான சமயத்தில் இக்கருமம் செய்யலாம். (கால விதானம்) நந்தை - பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி, பத்ரை - துதியை, ஷ்ப்தமி, துவாதசி, திரிபாத நட்சத்திரம், கார்த்திகை, உத்தராடம், புனர் பூசம், விசாகம், பூரட்டாதி) 26 ஆம் நாளுக்கு மேல் 31 ஆம் நாள் வரையில் அந்தியேஷ்டி செய்யலாம்.

சுடலை, ஆற்றங்கரை, குளக்கரை, சமுத்திரக் கரை, வீடு (கிணற்றடி) ஆகிய இடங்களில் அந்தியேஷ்டி செய்வதற்கு உகந்த இடங்களாகும். ஒன்பது முழம் முதல் குறைந்த பட்சம் ஐந்து முழ நீள அகலங் கொண்ட மண்டபம் அமைத்தல் வேண்டும். இம் மண்டபத்திற்கு பதினாறு அல்லது பன்னிரண்டு அல்லது நாலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கள் அமைய வேண்டும். மேலே வெள்ளை கட்டி விதானம், தோரணம், பூமாலைகளால் அலங்கரித்து நான்கு திசைகளிலும் வாயில் அமைத்து தெற்கில் பிரதான வாயில் அமைத்து சாணத் தினால் நிலத்தை மெழுகி மண்டபத்தை ஒன்பது பதமாக்கவும்.

நடுப்பக்கத்தில் ஓம குண்டமும், வட மேற்கில் சிவ கும்பமும் வட கிழக்கில் வர்த்தனி (பாசுபதாஸ்திர) கும்பமும் தென் மேற்கில் பஞ்ச கௌவிய மேடையையும் தென்கிழக்கில் சிதாவஸ்து தானம் (பிரேத தகன இடம்) ஆகியவற்றையும் சுற்று வேதிவையில் (மண்டபத் தின் சுற்றுப்புறத்தில்) தசாயுத கும்பங்களையும் அமைத்துக் கொள்ளவும்.

சிவாஸ்து தானத்தை வடக்கு தெற்காக நீண்ட சதுரமாக்கி இருபத் தைந்து பதமாகப் பிரித்து நடுப்பதம் ஐந்திலும் மஞ்சள் மாவும், தென்மேற்கில் நாலு பதத்திலும் வெள்ளை மாவும், தென் கிழக்கில் நாலு பதத்தில் சிவப்பு மாவும் வடகிழக்கில் நாலு பதத்தில் கறுப்பு மாவும் வட மேற்கில் நாலு பதத்தில் பச்சை மாவும் மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வெள்ளை மாவும், தெற்கில் உள்ள ஒரு பதத்தில் கறுப்பு மாவும், கிழக்கில் உள்ள ஒரு பதத்தில் மஞ்சள் மாவும் இட் டுக் கொள்ளவும்.

புத்தளிகை (பிரேதம் போலச் செய்யும் தருப்பை) முப்பத்தாறு தர்ப்பைகளால் முறுக்கி இடப்பக்கமாக முடிந்து ஐவைந்து தர்ப்பை களால் கைகளும் பதின்மூன்று தர்ப்பைகளால் பிரித்து கால்களை யும் ஆக்க வேண்டும்.

ஆசாரியர் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து தெற்கு வாயிலால் மண்டபத்துட் புகுந்து சிவகும்ப வேதிகைக்குத் தெற்கே வடக்கு நோக்கி இருந்து கர்த்தவிற்குத் திருநீறு கொடுத்து சங்கற்பம் செய்து கொண்டு சளீகரணம், பூத சுத்தி, மந்திர சுத்தி, அந்தர்யாகம், சிவகஸ்தம் செய்து சிவயோகம் பாவனை முடித்து ஞானகட்க தாரணம் செய்தல் வேண்டும். பஞ்சகௌவிய பூசை முடித்து, யாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தையும், கர்த்தாவையும் புத்தளிகையையும் பஞ்சகௌ வியத்தால் (புரோட்சித்தல்) தெளித்தல் வேண்டும். சூர்ணோற்சவம் செய்து சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனதினாலே செய்து நெற்பொரி முதலியவற்றை மண்டபத்தில் தூவி மிகுதியை ஈசானத் தில் பாசுபதாஸ்திர வர்த்தளி ஆசனத்தில் இடவும்.

**சிதாவஸ்து பூஜை**

நடுப்பதம் ஐந்திலும் பிருதுவி தத்தவத்தையும் பிரம்மாவையும் தென்மேற்கு மூலையில் நான்கு பதத்திலும் அப்பு தத்துவத்தையும் விஷ்ணுவையும் தென்கிழக்கு மூலையில் நான்கு பதத்திலும் தேயு தத்துவத்தையும் உருத்திரனையும் வடமேற்கு மூலையில்நான்கு பதத்திலும் வாயு தத்தவத்தையும் மகேஸ்வரனையும் வடகிழக்கு மூலையில் ஆகாச தத்துவத்தையும் சதாசிவனையும், வடக்கில் உள்ள ஒரு பதத்தில் குபேரனையும் மேற்கில் உள்ள ஒரு பதத்தில் வருணனையும், தெற்கில் உள்ள ஒரு பதத்தில் யமனையும், கிழக் கில் உள்ள ஒரு பதத்தில் இந்திரனையும் பூசித்து பழம் தாம்பூலம் நிவேதித்து நீராஞ்சனம் செய்தல் வேண்டும்.

வர்த்தனி பூஜை செய்து பாசுபதாஸ்திர பூஜை செய்து ஞான வாளை ஒப்புக் கொடுத்து யாகத்தைக் காத்து ரட்சிக்கும் படி வேண் டிய பின் தசாயுத பூஜை செய்ய வேண்டும். வடகிழக்குத் திசை முதல் கிழக்குத் திசை வரையுள்ள எட்டுக் கும்பத்திலும் சூலம், கதை, துவசம், பாசம், கட்கம், தண்டு, சக்தி, வச்சிரம் அகியவற்றையும், வடகிழக்கில் தெற்கில் உள்ள கும்பத்தின் பத்மத்தையும், தென் மேற்கில் வடக்கே உள்ள கும்பத்தில் சக்கரத்தையும் பூசித்து தசாயுத தேவர்களிடம் யாகம் முடியும் வரை பாதுகாக்க வேண்டும். என சிவாஞ்சையைத் தெரிவித்தல் வேண்டும் பின்னர் சிவகும்ப பூஜை சிவாக்கினி காரியம், பிராயச்சித்த செபம், நாடீசந்தானம், மிருதக தீட்சை செய்து சிதாவாஸ்து தானத்தில் பூசித்த ஐவகை மாவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டு அதன் மேல் புத்தளிகையை வைத்து வாய்க்கரிசியிட்டு, கொள்ளி வைத்துக் குடம் உடைத்து தகனம் செய்த பின்னர் காடாற்றி புத்தளிகைச் சாம்பலை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும்.

**நக்னதானம்**

இறந்தவருக்கு எற்படக்கூடிய பசி, தாகம், குளிர் (ஆடை இல் லாத குறை) போன்றவற்றை நீக்கும் பொருட்டுச் செய்யப்படும் தானம் நக்ன தானம் ஆகும். குடும்பத்தவராய் உள்ள ஆசாரியருக்கு அரிசி வஸ்திரம் முதலியவற்றைத் தானமாகக் கொடுக்க வேண்டும். உயர் தீட்சை உடையோருக்கு பிரேத தகனம் செய்த உடன் இத்தானம் கொடுக்கப்படும்.

**துர்மரணப் பிராயச்சித்தம்**

இயற்கையாக உயிர் பிரியாது தன் உயிரைத் தானே மாய்த்துக் கொள்ளல் அல்லது ஏதுக்களால் உயிர் பிரிதல் துர்மரணம் எனப் படும். நீரில், நெருப்பில் பாய்ந்தால், நஞ்சு உண்டால், பாம்பு கடித் தலால், ஆயுதங்களால் ஏற்படும் இறப்பு துர்மரணமாகும்.

இது புத்திபூர்வம், அபுத்திபூர்வம் என இருவகைப்படும். புத்தி பூர்வம் எதிர்பாராத விதமாக உயிர் பிரிதல். அபுத்திபூர்வ துர்மரணத் தில் சாதாரண மரணம் போலவே கிரியையும் ஆசௌசமும் கொள் ளப்படும். இதில் தேகம் பின்னப்பட்டிருந்தால் ஆசௌச முடிவில் பிரதித்தேகத்தில் (புத்தளிகையில்) புனர் தகனம் அந்தியேட்டி செய்ய வேண்டும். புத்திபூர்வ துர்மரணத்தில் சாதாரண அக்கினியில் தகனம் செய்து ஒரு வருடம், அல்லது ஆறு மாதம், மூன்று மாத முடிவில் இறந்த திதியில் தர்ப்பையால் செய்யப்பட்ட பிரதித் தேகத்தில் அந்தியேட்டி செய்து கொள்க. துர்மரணமடைந்தோர் பைசாச ரூபத்தில் அலைவர். ஆதலால் பைபாச புவனத்திற்கு அதிபதியாகிய வைரவருக்கு சாந்தி செய்த பின்பே அந்தியேட்டி செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஷாணத்தாபனம்

இறந்தவருடைய ஆன்மாவைக் கல்லிலே பூசித்தல் பாஷாண பூஜை எனப்படும். (பாஷாணம் - கல்) இதில் செய்யப்படும் கிரியைகள் ஆன்மாவின் பசி, தாகம், நீங்கும் பொருட்டும், பிரேத வடிவம் நீங்கும் பொருட்டும், ஆன்மாவின் உணவு விருப்பங் களைப் பூர்த்தி செய்யும் பொருட்டுமேயாகும்.

இக்கிரியை வீட்டில் மண்டபம் அமைத்து விரிவாகச் செய்ய லாம். பிரேதத்தில் அந்தியேட்டி செய்வார்கள் வீட்டிலே பாஷாணத் தாபனம் செய்து விரிவாக பூஜை நிகழ்த்துவர். இக்காலத்தில் தர்ப்பை சுடுதல் நிறைவெய்தியதும் அந்தியேட்டி மண்டபத்தி லேயே இக்கிரியை நிகழ்கிறது.

மண்டபத்தில் வேதிகை அமைத்து வேதிகையில் வடக்கு முகமாக ஒரு கும்பம் வைத்து அதில் இறந்தவர் தீட்சைக்கு ஏற்றது போல உருத்திரர், ஈசுவரர், சதாசிவர் என்பவரில் ஏற்றவரைப் பூசித்தல் வேண்டும். ஒரு பாத்திரத்திலேயே கல்லினைக் கூர்ச்சங் கட்டி வடக்கு முகமாக வைத்து அதில் இறந்தவருடைய ஆன்மா வை ஆவாகனம் பண்ணி எண்ணெய் அரிசிமா முதலான அபிடேகத் திரவியங்களால் அப்டேகம் செய்து வஸ்திரம் சாத்தி பூஜை தர்ப்ப ணம் செய்தல் வேண்டும். தர்ப்பணம் வாசோதகம், திலோதகம், குசோதகம் என மூன்று வகையுண்டு. கோடிச் சீலை யோடு சேர்த்து தர்ப்பணம் செய்வது வாசோதகம், எள்ளுடன் சேர்த்து செய்வது திலோதகம். தர்ப்பையுடன் சேர்த்து செய்வது குசோதகம். தர்ப்ப ணம் முதல்நாள் மூன்றாம், இரண்டாம் நாள் நான்கும் என்ற வகையில் ஆசௌச முடிவுநாள் வரை செய்தல் வேண்டும். முப்பது நாள் ஆசௌசிகள் 525 தர்ப்பணம் செய்தல் வேண்டும். நாளுக்கு ஒன்றாக ஆசௌசக் கணக்கில் பிண்டம் இடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவசிராத்தம்** - இது முதல் நாட்தொடங்கி ஒன்றித்த நாளில் செய்யப்படுவது. ஒழுக்கமுள்ள அந்தணர் ஒருவரை அழைத்து இறந்தவருடைய ஆன்மா நற்கதியை வேண்டி தானம் கொடுத்து அவரிடம் தான பல தீர்த்தத்தை வாங்கித் பாஷானத்தின் மீது விடு வதன் மூலம் இறந்த ஆன்மாவிற்கு பிரேதத் தன்மை நீங்கி நற்கதி கிடைக்கும்.

**சங்கிதா சிராத்தம்** - பதினொரு மந்திரங்களில் நேத்திரம் ஒழிந்த பத்து மந்திரங்களைப் பத்து சீலமுள்ள அந்தணர்களில் ஆவாகித்து அவர்களுக்கு செய்யும் தானமாகும். இதனால் தீட்சையின் பின் ஏற்பட்ட ஆசார அனுட்டானக் குறைகள் நீங்கும். உருத்திர பலி இட்டு அதன் பின் பிரபூத பலி எனப்படும் பேருணவு படைத்து தீபாராதனை தோத்திரம் செய்தல் வேண்டும். இறந்தவர் மேல் பாடப்பட்ட சரமகவி (கல்வெட்டு) பாடி சுற்றத்தவர் பூவும் நீரும் இட்டு அஞ்சலி செலுத்தல் வேண்டும்.

கல்லிலே பூசித்து ஆன்மாவைக் கும்பமூர்த்தியிடத்தும் கும்ப மூர்த்தியை அதற்குரிய இடத்திலும் ஒடுக்கி கும்பம், கல், பிண்டம், சாம்பல் முதலியவற்றை வாத்திய ஒலியுடன் சமுத்திரம் முதலான நீர் நிலைகளில் விடுக.

நீர்நிலைகளில் மார்பளவு தண்ணீரில் வடக்கு முகமாக நின்று பிண்டத்தை முதலிலும் கும்பத்தை அடுத்தும் பாசணத்தை பின்ன ருமாக விட வேண்டும். நீராடி விட்டு வீட்டிற்கு வர வேண்டும்.

வீட்டு வாசலில் வேப்பிலையைத் தின்று துப்பி ஆசமனம் செய்து அக்கினி, தண்ணீர், கோமயம், வெண்கடுகு இவைகளைத் தொட்டு உலக்கையைக் கடந்து கால்கை கழுவி வீட்டினுட் செல்லவும்.

இதுவரை கூறிய கிரியைகள் சைவக் குருக்கள் செய்வதும் மேற் பட்ட வீட்டுக் கிரியைகளைப் பிராமணக் குருக்கள்மார் செய்வதும் நடைமுறையில் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துடக்குக் கழிவு

எமக்கு ஆசௌசம் முப்பது இரவுகள் முப்பத்தோராம் நாட்காலையில் தான் துடக்குக் கழிவு நிகழ வேண்டும். சைவ போசனமுடையவர்கள் வேறு மாமிசம் உண்பவருடன் கலப்பின்றி இருந்தால் பதினாறாம் நாளில் ஆசௌசம் நீங்கும்.

அந்தியேட்டி செய்பவர்கள் வீட்டை வீட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்னர் வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து அனைவரையும் நீராடி பிராமணக் குருக்களைக் கொண்டு புண்ணியாக வாசனம் செய்து ஆசௌசம் நீக்கலாம். இதன் பின்னர் தான் பாஷாண (கல்லடி)ப் படையலுக்கு உணவு தயாரித்தல் வேண்டும். ஆசௌசம் நீங்கிய மறுநாளில் ஏனைய கிரியைகள் செய்யலாம்.

## வீட்டுக் கிரியை

வீட்டு முற்றத்தில் மெழுகி பூரணகும்பம் (நிறைகுடம்) வைத்து, தீபம் ஏற்றி பிள்ளையார் பிடித்து வைத்து, வாயிலில் மாவிலை கட்டவும். வீட்டுக் கிரியைகளில் முதலில் சங்கல்பம் செய்து விக்னேஸ்வர பூஜை, தீப தேவி பூஜை, பஞ்ச கௌவிய பூஜை, வருண கும்ப பூஜை என்பன நிறைவேற்றிய பின் கர்த்தாவிற்கு பஞ்சகௌவியம் பருகக் கொடுக்கப்படும்.

## அனுஞ்ஞை

ஒரு வாழை இலையில் மூன்று தர்ப்பை, பவித்திரம், எள்ளு, தாம்பூலம், உபவீதம், காசு என்பவற்றை கர்த்தா தலையில் வைத்து இடப்புறமாக மூன்று முறை சுற்றி இன்னவரிடம் அயனம் ருதுமாதம், பட்சம், நட்சத்திரம், திதி, வாரம் கூடிய சுபதினத்திலே இன்னாருக்கு சிரார்த்தம் செய்கின்றேன். அதற்கு அதிகாரங் கொடுக்க வேண்டும் என்று குருவிடம் வேண்ட அவர் அதிகாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தோம் என்று கட்டைத் தர்ப்பையை கர்த்தாவிடம் கொடுக்க அதைக் கர்த்தா இடுப்பில் சொருகிக் கொள்வர். பின்னர் வலதுகை மோதிர விரலில் பவித்திரத்தையும் வலத்தோளில் உபவீத்த்தையும் அணிந்து கொள்ளவும்

சூரியபூசைசிவப்பு நிறப் பூவும் நீருங்கொண்டு மூன்றுமுறை ஆத்ம பிரதட்சணம் செய்து சூரிய மூர்த்தியை செய்யப்போகும் சிரார்த்தத்திற்கு சாட்சியாக இரந்து அருள வேண்டுமெனப் பிரார்த்தித்து முற்றத்தில் வைக்கப்பட்ட கும்பத்தில் பூவையும் நீரையும் போட்டு வழிபடவும்.

தந்தைக்கு அல்லது தாய்க்கு இடபதானம், ஏகோத்திட்டம், பஞ்சதச (பதினைந்து) மாசியம், சோதகும்ப சிராத்தம், சபிண்டீகரணம் என்பன செய்யப் போகின்றான் என்று சங்கற்பம் பண்ணிக் கொள்ளவும்.

**இடபதானம்**

இறந்தவருடைய தருமங்களின் பலனை தருமத்தின் வடிவாயுள்ள இடபத்தின் மூலமாக சிவபெருமானிடம் சேர்க்கும் பொருட்டு இடபதானம் செய்யப்படும். இடபம் (ஆண்மாடு) தானம் செய்ய வசதிப்படாத இடத்து ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதில் இடபத்தின் வடிவை எழுதி அதன் மேல் தேங்காய் வைத்து கர்த்தா அத்தாம்பளத்தை நாலு திசையிலும் இழுத்து உரிய மந்திரங்களைக் கூறித் தட்சணையுடன் அதை ஓர் அந்தணருக்குத் தானமாகக் கொடுக்கவும்.

**ஏகோதிட்டம்**

இது இறந்தவர் ஒருவரை மட்டும் குறித்துச் செய்யப்படும் தானமாகும். அந்தணர் ஒருவரை அழைத்து மேற்கு முகமாக ஆசனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் இருத்தி அவருக்கு ஸநானத்திற்கு வேண்டிய நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம் கொடுத்து நீராடியதாக படபாவனை செய்து வேட்டி, சால்வை சந்தணம், பூ என்பவற்றை சாத்தி அரிசி, மரக்கறி என்பவற்றைக் கொடுத்துப் பூசிக்கவும்.

தரையை சுத்தம் செய்து வாழை இலை போட்டு, ஒரு தருப்பையைத் தெற்கே நுனி இருக்கும் வண்ணம் வைத்து ஒரு பிண்டம் இடவும். பச்சை அரிசிமா, உழுந்து, எள், பால் தயிர், நெய், தேன் வாழைப்பழம் ஆகிய பொருட்களை சேர்த்து உருட்டிப் பிண்டம் செய்யப்படும். கர்த்தா தெற்கு முகமாக இடது முழந்தாளையும் இடது கையையும் ஊன்றியிருந்து கைமாறிப் பிண்டம் இடவும். சந்தனம், பூ சாத்தி, வெற்றிலை, பாக்கு, பழம், இளநீர், நைவேத்தியம் நிவேதித்து, தர்ப்பணம் செய்து நமஸ்காரம் செய்து கொண்டு தமது சக்திக்கு ஏற்றவாறு தானம் கொடுக்கவும். இத்தானத்தினால் ஆன்மா உலகு வாழ்வில் ஓரளவு திருப்தியடையும். இதில் இருபத்திநாலு தானங்கள் கூறப்படுகின்றன. அவையாவன : பவித்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம் (சால்வை), பொன் மோதிரம், இரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருட்கள், சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருட்கள், தாசீ, தாசர்கள் என்பனவாம். ஏகோ திட்டம் ஏற்ற குருவிற்கு தானம், தட்சணைகளைக் கொடுத்து வழி அனுப்பி மஞ்சள் நீர் தெளித்து, இடத்தைச் சுத்தம் செய்து கர்த்தா கைகால் கழுவி அல்லது நீராடி வந்து பஞ்ச கௌவியம் பருகிக் கொள்ளவும்.

### மாசியம்

இறந்த வருடத்தில் மாதந்தோறும் செய்யப்படும் சிரார்த்தமே மாசிகமாகும். இது மாதந்தோறும் இறந்த திதியில் செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் மாதத்திற்குரிய மாசிகம் ஏகோதிட்டம் என்ற பெயரில் முதலில் செய்யப்பட்டது. இரண்டாம் மாதம் தொடக்கம் பதினொரு மாத மாசிகமும், ஊனமாசிகம், ஊனதிரிபட்ச மாசிகம், ஊனசாணட மாசிகமும், ஊன ஆப்திக மாசிகமும் ஆகப் பதினைந்து மாசிகம் செய்தல் வேண்டும்.

1. ஊனமாசிகம் - இறந்த நாள் முதல் இருபத்தேழு நாளில் மேல் மூன்று நாட்களுட்குள் செய்யப்படுவது.

2. ஊனதிதிபட்ச மாசிமகம் - அவ்வண்ணம் நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்தாம் நாளுக்கிடையில் செய்யப்படுவது.

3. ஊனசாண் மாசிகம் - மேற்கூறப்பட்டபடி நூற்று எழுபதாம் நாள் முதல் நூற்றெண்பதாம் நாட்களுக்கிடையில் செய்யப்படுவது.

4. ஊன ஆப்திக மாசிகம் - அவ்வாறே முந்நூற்றைம்பதாம் நாள்முதல் முந்நூற்றறுபத்தைந்தாம் நாட்களுக்கிடையில் செய்யப்படுவது.

மாதந் தோறும் செய்யும் பதினொரு மாசியங்களும் இறந்த திதியில் செய்யப்படும் ஊன மாசிகங்கள் நான்கும் தோஷங்கள் இல்லாத நாளில் செய்ய வேண்டும். வெள்ளிக்கிழமைகளிலும் நந்தை, சதுர்த்தசி. அமாவாசை என்னும் திதிகளிலும் கார்த்திகை, ஆயிலியம், பூரம், கேட்டை, மூலம், பூரட்டாதி என்னும் நட்சத் திரங்களிலும் திரிபுஷ்கரயோகம் துவிபுஷ்கரயோகம் என்பவற்றி லும் ஊன மாசிகம் செய்தல் ஆகாது.

(துதியை, சப்தமி, துவாதசி என்னும் திதிகளும் கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி என்னும் நட்சத் திரங்களும் ஞாயிறு, செவ்வாய், சனி என்னும் வாரங்களுமாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றும் கூடுவது திரிபுஷ்கரயோகம். இண்டும் கூடுவது துவிபுஷ் கரயோகம்)

பதினைந்து மாசியங்களும் செய்ததன் மேல் வருட முடிவில் தான் சபிண்டீகரணம் செய்தல் வேண்டும். ஆயினும் கர்த்தாவின் அசௌகரியங்களை உத்தேசித்து ஆசௌச முடிவில் பதினைந்து மாசியங்களையும் செய்து முடிப்பர். இப்படிச் செய்தாலும் பின்னரும் உரிய காலத்தில் மாசியங்களைச் செய்வது சிறந்ததாகும்.

### சோதகும்ப சிரார்த்தம்

இது நீர் நிரம்பிய பாத்திர (உதகம் - நீர்) தானமாகும். இறந்த நாள் முதல் வருடம் முந்நூற்றி அறுபத்தைந்து நாளிலும் இத்தானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்ய வசதி ஏற்படாததால் இப்போது சபிண்டீகரணத்தின் முன் சோத கும்பதானம் நடைபெறும்.

### சபிண்டீகரணம்

பிண்டங்களை ஒன்று சேர்த்தல் சபிண்டீகரணம் ஆகும். இதிலே பிதிர் வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் மாத்ரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் நிமித்த (இறந்தவருக்கு) ருக்கு ஒரு பிண்டமும் இடப்படும். நிமித்த பிண்டத்தைப் பிதிர் பிண்டத்துடன் சேர்ப்பதால் இறந்த உயிர் பிரேதத் தன்மை நீங்கிப் பிதிர்த்தன்மையும் சிவலோகப்பேறும் அடையும். சபிண்டீகரணத்தின் மேற்செய்யும் சிரார்த்தங்களில் நிமித்த பிண்டம் இன்றி பிதிர்ப் பிண்டம் மூன்று இட்டுச் செய்ய வேண்டும்.

சபிண்டீகரணம் பார்வண விதானம், ஏகோதிட்ட விதானம் என இருவகைப்படும். பார்வண விதானம் பிதிர்தேவர் மூவரைக் குறித்துச் செய்யப்படுவது ஏகோதிட்ட விதானம் குறித்த பிதிர், தேவர் ஒருவரைக் குறித்துச் செய்யப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை, தாய் தந்தையின் சகோதரன், அவன் மனைவி, பேரன், பேத்தி, ஆகியோருக்குச் செய்யும் சபிண்டி பார்வண விதானமாய் அமையும். மனைவி, கணவன், சகோதரன், மகன், மகள், மாமன், மாமி, ஆகியோருக்குச் செய்யும் போது பேரன், பேத்தி உயிருடன் இருந்தால் ஏகோதிட்ட விதானமாகச் செய்ய வேண்டும்.

வீட்டுக் கிரியையைப் பொதுவாக சபிண்டீகரணம் என்று சொல்லும் வழக்கு இப்போதுண்டு. ஏகோதிட்டம் பதினைந்து மாசிகம், சோதகும்பசிரார்த்தம் என்பவற்றைச் செய்த பின்பே சபிண்டீகரணம் செய்ய வேண்டும். இது ஒரு வருட முடிவில் செய்யத்தக்கது. எனினும் இடையில் ஏற்படும் வசதியீனங்களைக் கருதி ஆசௌசம் நீங்கிய மறுதினத்தில் செய்யலாம். இதிலே நாலு பகுதிகள் உண்டு.

1. சிவனடியார் பொருட்டு இருவர் - நந்தி தேவர், மாகாகாளர் (விசுவ தேவர்.)

2. பிதிர் தேவர் பொருட்டு மூவர் - கந்தர், சண்டர், கணாதீசர்

3. அதிதி அப்பியாகாதர் இருவர் - முன்னறியப்படாதவர் அப்போது அங்கு வந்தவர்.

4. நிமிர்த்தர் - இறந்தவர் பொருட்டு ஒருவர்

இவ்வாறு எண்மர் அமர்த்தப்படுவர். எண்மர் கிடைக்காத போது ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவராக நால்வரையேனும் விசுவ தேவருக்கு ஒருவர் பிதிர் தேவருக்கு ஒருவராக இருவரையேனும் அமர்த்தலாம். ஒருவரே அமையும் போது புயங்களில் விசுவ தேவரையும், தோளுச்சியில் பிதிர் தேவர்களையும் பூசிக்கலாம்.

இவர்களைச் சகல உபசாரங்களும் செய்து வீட்டினுள் அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து தர்ப்பை ஆசனத்தில் விசுவதேவர் அதிதி அப்பியாகாதரை கிழக்கு முகமாகவும், பிதிர் தேவர்களை வடக்கு முகமாகவும், நிமிர்த்தரை மேற்கு முகமாகவும் அமர்த்துக. அவர்கள் முன் பாத்திரங்களை வைத்து தேவ பாத்திரத்தில் நெல்லும் பிதிர் பாத்தி ரத்தில் எள்ளும் இட்டு பூசிக்கவும். பூணூலை வலப்பக்கமாக இட்டு விசுவதேவரையும் இடமாக இட்டு பிதிர் தேவரையும் பூசிக்க வேண்டும். நிமித்தரையும் அதன் பின் அதிதி அப்பியா காதரையும் பூசித்து வஸ்திரம், அரிசி, காய்கறி தானம், தட்சணை கொடுக்கவும். அவாகள் முன்னிலையில் சாணத்தால் மெழுகி வாழையிலையில் தெற்கு நுனியாக தர்பைகளை வைத்து எள்ளுச் சிதறிக் கர்த்தா, தெற்கு நோக்கி இடது முழந்தாள் இடது கையை ஊன்றி இருந்து வடக்கிலிருந்து தெற்காக முதல் வரிசையில் பிதிர் வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும், கிழக்கில் மூன்றாவது வரிசையில் நடுவில் இறந்தவர் (நிமிர்தர்) குறித்து ஒரு பிண்டமும் இடுக. நிமிர்த்த பிண்டம் சற்று நீண்டதாய் நுனி வளைந்து மற்றப் பிண்டங்களை தீண்டுவதாய் அமையும்.

பிண்டத்திற்கு மஞ்சள், சந்தணம், பூவும் சாத்தவும். இறந்தவர் ஆணாகில் வேட்டியும் பெண்ணாகில் சேலையும் பிண்டத்திற்கு சாத்தவும். பிண்டத்திற்கு மேற்கே அன்னம், கறிவகை, தயிர், பாயா சம், பலகாரம், பழவகை, வெற்றிலை, பாக்கு, என்பவற்றைப் படைக்கவும் இளநீரை வெட்டித் திறந்துவைக்கவும் பின்னர் தூபதீபம் காட்டி வழிபாடு செய்யவும் கர்த்தாவும் உறவினரும் பூவும் நீரும் இட்டு வழிபட்ட பின் திருமுறை பாடி சமரகவி பாடி தர்ப்பணம் செய்யவும். நிமிர்த்த பிண்டத்தில் சாத்திய பூவை எடுத்து பிதிர்ப் பிண்டத்தில் சேர்க்கவும். இதனால் இறந்தவர் பிதிர்களுடன் சேர்ந்தார் எனக் கொள்ளப்படும். பின்னர் சகல பிதிர் தேவர்களையும் உற்பாசனம் செய்து பிண்டங்களை பசுவிற்கு கொடுக்கவும் அல்லது சமுத்திரத்தில் விடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு தெற்காக மூன்று பாத்திரமும் கிழக்கில் ஒரு பாத்திரமும் வைத்து அவற்றுள் அர்க்கியம் (நீர், சந்தணம், பால், எள்ளு, தர்ப்பைநுனி, பூ) இட்டு மூன்று பாத்திரத்துள்ளும் பிதிர் தேவரையும் தனிப்பாத்திரத்தில் நிமிர்த்தரையும் பூசித்து நிமிர்த்தருக்குரிய பாத் திரத்தில் உள்ள அர்க்கிய சலத்தை பிதிர்தேவரக்குரிய மூன்று பாத் திரத்தில் உள்ள சலத்துடன் சேர்க்கும் நிகழ்வு அர்க்கிய சம்யோசனம் எனப்படும்.

பின்னர் குருவிற்கு தட்சணைகொடுத்து ஆசீர்வாதம் பெற்ற பின் குரு கர்த்தாவிற்கு மஞ்சளால் திலகமிட்டு அதன் மேல் அட்சதையை வைத்து விடுவர். குருவை வீட்டு வாசல் வரை சென்று வழியனுப்பி உறவினர் நண்பர்களுடன் உணவு உண்ணவும்.

**ஆப்திகம் (ஆட்டைத்திவசம்)**

ஓர் ஆண்டு முடிவில் செய்யப்படும் சிரார்த்தம் ஆதலால் இது ஆட்டைத் திவசம் எனப்படும். இறந்த திதியில் செய்யும் இந்த சிரார்த்தத்துடன் இறந்தவரைக் குறித்து செய்யும் அபரக் கிரியைகள் நிறைவுறும்.

**சுபம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக்கிரியை தொடர்பான வினா விடை

**1. இறந்தவருக்கு கிரியை செய்வதன் அர்த்தமென்ன?**

இறந்ததன் மேலும் அவருக்கு வாழ்வுண்டு என்பதே அர்த்தமாகும்.

**2. இறந்த பின் அவருக்கு எங்கே வாழ்வு, எப்படி வாழ்வு?**

அவருக்கு சுவர்க்கத்திலும், நரகத்திலும் வாழ்வுண்டு. திரும்பவும் அவர் பூமியிற் பிறந்து முன் வாழ்ந்தது போல வாழும் வாழ்வுண்டு. சுவர்க்க வாழ்வு இன்பானுபவம். நரக வாழ்வு துன்பானுபவம். திரும்ப வரும் பூமி வாழ்வு இன்ப துன்பக் கலப்பான அனுபவம்.

**3. இறந்த பின்பு அவர் இங்கில்லை, அந்நிலையில் அவருக்கு செய்வதை அவர் பெறுவதெப்படி?**

இறந்த பின்பும் குறைந்தது முப்பத்தொரு நாள் வரை அவர். அதாவது அந்தியேட்டி வரை அவர் இங்கே தான் இருக்கிறார். அதாவது தான் விட்ட உடலின் தொடர்பு நீங்காமல் அருவ உருவமாய் இருந்து கொண்டிருக்கின்றார். அந் நிலையில் உடலைத் தொடர்புபடுத்திச் செய்யுங் கிரியைகளின் பலனை அவர் நேரடியாகவே பெறுகிறார். அந்தியேட்டியின் பிறகு நிகழும் கிரியைகளின் பலனை மேலுலகத்திலள்ள பிதிரர்கள் என்ற தேவதாசியர் ஏற்று அவர்கள் எங்கிருந்தாலும் அங்கங்கு சேரச் செய்கிறார்கள்.

**4. இக்கிரியைகளை அபரக்கிரியைகள் என்பதேன்?**

அவை இறந்த பின் செய்யப்படும் கிரியைகள் என்பதனால் அபரக்கிரியைகள் எனப்படும். அபரம் என்றால் பின் என்று பொருள்படும்.

**5. அபரக் கிரியைகள் எவை?**

பிரேதக் கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியேட்டி, மாசிகம், ஆட்டைத்திதி, திவசம் என்பனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. அபரக் கிரியை உடலுக்காகவோ? உயிரக்காகவோ?**

உயிருக்காகவே தான். ஆனால் அந்தியேட்டி வரை உடல் தொடர்பில் வைத்தும் பிறகு தனியாக உயிரைக் கருதியும் செய்யப்படும்.

**7. இக்கிரியைகளினால் உயிருக்கு நன்மை விளைவது எங்ஙனம்?**

இக்கிரியைகளைால் உயிருக்கு இரு விதத்தில் நன்மை விளையும். தனது சரீரத்தை விட்டுக் கிளம்பிய உயிர் அதன் மேல் பெற வேண்டிய அனுபவங்களுக்கு உபகரிப்பது ஒன்று. படிப்படியாக அவ்வுயிர் சிவத்தன்மை பெறுவது ஒன்று.

**8. சிவத்தன்மை பெறுவதென்பது எங்ஙனம்?**

அபரக்கிரியைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. அதற்குத்தக்க அளவு உயிரைப் பற்றியுள்ளமலபந்தம் விலகிக் கொடுக்கும். மலம் விலகுமளவுக்குச் சிவத்தன்மை சிறிது சிறிதாகப் பற்றும். காலப்போக்கில் சரியான பக்குவம் வாய்க்கும்போது முழுமையாக அது சிவத்தன்மை பெற்றுவிடும்.

**9. நினைவஞ்சலிகளில் அவர் சிவபதம் அடைந்தார் என்று தானே எல்லாரையும் குறிக்கிறார்கள். அப்படியானால் கிரியைகள் செய்யவேண்டிய அவசியம் எதற்கு?**

அப்படி குறிப்பது ஒவ்வொருவரும் சிவபதமடைய வேண்டும் என்ற நல்ல விருப்பத்தினால். உரைப்பது உபசாரம் என்ற அளவில் வைத்துக் கொண்டு உரிய கிரியைகளை முறைப்படி செய்ய வேண்டும்.

**10. பிரேதக் கிரியையில் கும்ப பூசை, அக்கினி காரியங்கள் எல்லாம் செய்வதேன்?**

அவையெல்லாம் முன் சொல்லியவாறு இறந்தவரைச் சிவமாக்கும் முயற்சிகள் தான். கும்பங்களில் உருத்திரனையும் திக்குப் பாலகர்களையும் எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகின்றது. அக்கினியிலும் சிவனை எழுந்தருளவைத்துப் பூசிக்கப்படுகின்றது. கும்பங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பூசிப்பதால் அவற்றிலுள்ள நீருக்குச் சிவத்தன்மை உண்டா கும். அந்நீரினால் இறந்த உடலுக்கு நீராட்டுவதால் நீரிலுள்ள சிவத் தன்மை உடலிற் செறியும். அக்கினி சிவமாகப் பூசிக்கப்படுவதால் அதில் ஏற்பட்ட சிவத்தன்மையானது அந்த அக்கினியால் உடலை எரிக்கும் போது அதன் சிவத்தன்மையை மேலும் அதிகரிக்க உதவும். உடலை விட்டுப் பிரிந்தாலும் ஒரு வகையில் அதன் தொடர்பு நீங்காதிருக்கும். உயிருக்கும் அச் சிவத்தன்மை பதியும்.

**11. உடலை விட்டுப் பிரிந்த பின்னும் உயிர் உடல் தொடர்பு நீங் காதிருக்கிறது என்பதை விளக்க முடியவில்லையே? அதை எப் படி நம்பமுடியும்?**

அப்படி அது தொடர்பு நீங்காதிருப்பதை நாங்கள் கண்ணால் காண முடியாது. காணும் பக்குவம் சாதாரணமாக எங்களுக்கில்லை. பக்குவமுள்ளவர்கள் கண்டு அதனைச் சொல்லியுள்ளார்கள். அவர் கள் சொல்வதை நாம் அனுமானித்து நம்புவதற்குரிய ஏதுக்கள் நடைமுறையில் நிறைய இருக்கின்றன. இறந்தவர் உயிர் விடும் போது கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் இளநீர் அல்லது தண்ணீர் செம்பு வைப்பதுண்டு. "எட்டு" என்ற வைபவத்திலன்று அவர் விரும்பி அருந்தி வந்த சகல உணவுப் பண்டங்களும் படைப்பதுண்டு. அங்கே பாடல் பாடி முடித்த பின், படைத்தவற்றிற் சிறிது எடுத்து முகட்டை நோக்கிக் காட்டுவதுண்டு. இவை யெல்லாம் இறந்தவர் தமது உடம்பு எரிந்த பின்னுங்கூட உடல் இருந்த சூழலில் இருக்கிறார் என்பதை அறிவிக்கும் ஏதுக்களாகும்.

**12. இறந்த பின் அவர் சுவர்ககம் அல்லது நரகம் போவாரென்று அல்லவோ முதலிற் சொல்லப்பட்டது. இப்போது இங்கே தான் இருக்கிறார் என்று கூறுவது அதற்கு மாறுபாடாயிருக்கிறதே?**

அதற்கு இது மாறுபடாது எப்படி எனில் இப்போது சொல்லப்படுகின்ற இந்தத் தொடர்பு முற்றாக நீக்கப்பட்டதன் மேல்தான் அவர் சுவாக்கம் அல்லது நரகத்திற்கு செல்வார். அந்தி யேட்டியில் தான் அத்தொடர்பு முற்றாக நீக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. அந்தியேட்டியில் அது நீக்கப்படும் என்பது எப்படி?**

அந்தியேட்டிக் கிரியையை அவதானிப்பதால் அது புலனாகும். அந்தியேட்டிக் கிரியைக்கு அமைக்கும். மாக்கோலிட்ட மண்டபத்தில் தென்கிழக்கு மூலையில் ஐந்துநிற மாக்கள் சதுர வடிமாகப் பரப்பப்பட்டிருக்கும். அதில் ஒவ்வொரு நிறமும் பஞ்சபூதங்களில் ஒவ்வொன்றைக் குறிக்கும். பஞ்ச பூதங்களால் அமைந்த உடம்பில் அவர் தொடர்புற்றிருந்தார் என்ற உண்மையின் அடிப்படையில் மா வடிவான சதுரங்களில் பஞ்சபூதங்களைப் பொருத்தி அவ்வப் பூதங்களுக்குரிய தெய்வங்களைப் பூசித்து அவற்றின் கருணையால் அவருக்கு அப் பூதங்களோடு இருந்த தொடர்புகளை நீக்கி விடுவது அக்கிரியையின் விளக்கமாகும்.

**14. அந்தியேட்டியிலும் தர்ப்பையில் ஆளுருவம் செய்து குளிப்பாட்டி பொற்சுண்ணமிடித்துச் சுடுகிறார்களே அது ஏன்?**

அதுவும் அந்தியேட்டி வரை உயிருக்கு உடல் தொடர்பு இருக் கிறதென்பதற்கான மற்றொரு அறிகுறி தான்.

**15. சிலருக்கு மட்டும் பிரேதக் கிரியையோடே அந்தியேட்டியும் செய்கிறாாகள். அது ஏன் ?**

சாதாரணமாக நம்மவரைப் போலல்லாது சிலர் விசேஷமான தீட்சை, ஆசாரம், ஒழுக்கம், சாதனை, சிவ பூசை ஒழுங்கு உள் ளவர்களாயிருக்கிறார். அதனால் அவர்களுக்கு விசேட பக்கவம் இருக்கிறது. அந்த வாய்ப்பினால் அவர்கள் இறந்த உடனே அப்படி நிகழ்கிறது.

**16. பிரேதக் கிரியைகளிலும் அந்தியேட்டியிலும் பொற்சுண்ணம் இடிக்கிறாாகளே அது எதற்காக?**

அதுவும் அவர் உடல் தொடர்புள்ளவராயிருத்தலிற் சமபந்தப் படும். அவருடைய தனு, கரண, புவனம், போகம் எல்லாவற்றை யும் அடித்து நொறுக்கி இல்லாமற் செய்தல் என்ற கருத்தில் தான் செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17. பொற்சுண்ணமிடிக்கையில் திருவாசகத்தில் இருக்கும் திருப் பொற்சுண்ணப் பதிகமும் பாடுகிறாாகளே. அது ஏன்?**

பொற் சுண்ணம் இடித்தலினால் இறந்தவருடைய தேகத் தொடர்பு நீக்கப்பட அவர் சிவலோகஞ் சேரத் தகுதியாகிறார். அப்படி அவர் சிவலோகஞ் சேரும் பட்சத்தில் அவருக்கு அங்கு வரவேற்பு நிகழும். அந்நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கும் ஓசைப் பொலிவும் பொருள் விளக்கமும் திருப்பொற்சுண்ணப் பதிகப் பாடல்களில் உண்டு. அதனாலேயே பொற்சுண்ணமிடிக்கும் நிகழ்ச்சியோடு இதுவும் தொடர்புபட்டிருக்கிறது. உண்மையில் சிவலோகஞ் சேரத் தகுதியுள்ளவர் விசயத்தில் உபசாரமாகும். என்றாலும் பரவா யில்லை. ஏனெனில் இவர்களுக்கும் எப்பவோவெனிலும், தமக்கு ரிய காலத்திற் சிவலோகமடைய வேண்டியவர்களே அது நியாய மான உண்மை. நியாயமான உண்மையை உபசாரமாகக் கையாளுவ திற் பழுதில்லை. அது திருத்தத்தக்குச் சிறந்த வழி என்பது சைவ விளக்க நிலை.

**18. அந்தியேட்டி முடிவில் வீட்டுக்கிரியை செய்வதேன்?**

அந்தியேட்டி முடிவில் இறந்தவரது வீட்டில், நக்கின தானம் ஏகோதிட்டம், பசுதானம். சபிண்டீகரணம் முதலிய பல கிரியைகள் நிகழும். இவையெல்லாம் பொதுவில் வீட்டுக் கிரியைகள் எனப்படும். அந்தியேட்டியில் தேகத் தொடர்பு நீங்கப் பெற்றவர் தனக்குரிய சுவர்க்க, நரக கதிகளிற் செல்வர். அவ்வாறு செல்லும் அவர் பாதை தனிமையானது. இருளானது விக்கினங்களோடு கூடியது. ஆதலால் அவ்வித கஷ்டங்களில் இருந்து அவருக்கு விமோசனமளிக்கும் நோக்கில் வீட்டுக் கிரியைகள் நிகழ்கின்றன. கிரியைகளில் குடை, செருப்பு, விளக்கு, செம்பு, தண்ணீர் முதலிய எல்லாம் கொடுப்பது அவ்வசதிகள் வேண்டியிருக்கும் பாதையில் அவை அவருக்கு உதவட்டும் என்பதனால் தான்.

**19. வீட்டுக் கிரியை அழைப்பிதழில் சிலர் சபிண்டீகரணக் கிரியை என்று மட்டும் குறிக்கிறார்களே அது ஏன்?**

அதற்கு எந்தவொரு விஷேட காரணமும் கிடையாது. வீட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியையின் பகுதிகள் என மேற்சொன்னவற்றிற் சபிண்டீகரணம் பிரதானமானது என்பதனால் தான் அவ்வாறு குறிப்பிடுகிறார்கள். எவ்வாறெனில் இறந்தவர் மேற்குறித்த கஷ்ட வழியெல்லாந் தாண்டிப்போய் தன் சுவர்க்க நரகப் பேறுகளைப் பெறுவதற்கு முன்சொன்ன பிதிரர்களின் சகாயம் வேண்டும். அதற்காக அவர் பிதிர்களோடு சேர்க்கப்பட வேண்டும். பிதிரர்களுக்கு அறிகுறியாக, மாவுடன் எள், அரிசி, தேன், சர்க்கரை, தயிர், குழைத்து உருட்டிய பிண்டங்களையிட்டு கிரியை செய்பவர் எல்லோரையும் ஒரு சேரப் பூசித்து எல்லோருக்கும் நைவேத்தியம் கதலி பல தாம்பூலம் எல்லாம் சமர்ப்பித்து தூப தீபாராதனை செய்து முடிவில் இறந்த வரைக் குறிக்கும் பிண்டத்தை மற்றப் பிண்டங்களோடு ஒன்று சேர்த்தல் காரணமாக இது சபிண்டீகரணம் எனப் பெயர் பெற்றது.

**20. அவ்வாறு பிண்டத்தாற் குறிக்கப்படும் பிதிரர் என்பவர் யார்? அவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் உள்ள தொடர்பு யாது ?**

பிதிரர் என்பார் படைப்புக் காலத்தில் இறந்தவர் நலன்களைக் கவனிக்கும் அலுவலர்களாக தொழிற்பட சிவனால் படைக்கப் பட்ட ஒரு தேவதாசியர். இறந்தவர் ஒரு ஆணானால் அவரது தந்தை பேரன், பூட்டன் என்றதற்கு பொருந்தும் நிலைகளில் அவர்கள் இருப்பர். இறந்தவர் பெண்ணானால் அவரின் தாய், பேத்தி, பூட்டி என்ற முறைக்குப் பொருந்தும் நிலைகளில் இருப்பார்கள். அதாவது இறந்தவர் பேரில் அவரது தகப்பன், தாய், பேரன், பேர்த்தி, பூட்டன், பூட்டி என்போருக்கும் கரிசனைக்குச் சமானமான கரிசனை உள்ள வர்களாக அவாகள் இருப்பார்கள். இறந்தவர் பேரில் அவர்கள் குறித்துச் செய்யப்படும் எள்ளும், தண்ணீருமிறைத்தற் (திலத்தர்ப் பணம்) கிரியையால் அவர்கள் திருப்தியுற்று இவரை குறித்துச் செய்யும் தான தருமங்களை அவர்கள் ஏற்று அவற்றின் மூலம் அவருக்கு நன்மை விளைவிப்பார். அதே வேளை கிரியை செய்விப்பார் மேல் அவர் தந்தை, தாய், முதலியோர் சொரியும் அன்பையும் ஆசியையும் இவர்கள் பெறவும் வகை செய்வார்கள். அதனால் தான் பிதிர்க்கடன் பிரதான கடன் எனப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. இப்படியான பரிவர்த்தனைகள் (கொடுக்கல் வாங்கல்கள்) உண்மையென நம்பலாமா ? இவற்றுக்கான தொடர்பு சாதனங்கள் எங்கே?**

ஏன் நம்பக் கூடாது சந்திர மண்டலத்துக்கு விண்வெளி ஓடங்களை அனுப்பினாற் போய்சேரும் என்று சில வருடங்குளுக்கு முன் நம்பியதில்லை. இப்போது நம்புகிறார்கள். உண்மையில் பூமிக்கும் சந்திரனுக்குமிடையில் புகை வண்டியோ தந்திக் கம்பியோ போன்ற எந்தவொரு சாதனமுமில்லை. ஆனால் அனுப்பும் பொருள் போய்ச்சேர விஞ்ஞானத்தில் தொடர்பு சாதனம் இருக்கிறது. இச்சாதனத்தை மனிதன் இப்போது தான் கண்டறிந்தான். என்பதேயன்றி இதற்கு முன் அதற்கு வழியிருந்ததில்லை என்பதற்கில்லை. அந்த அமைப்பை ஏற்படுத்தி வைத்த சிவன் மேற் குறித்த பிதிரர்களுக்கும் பூமியிலுள்ளோருக்கும் இடையில் அப்படியொரு தொடர்புக்கான சாதனங்கள் அமைத்து வைத்திருக்க மாட்டார்கள் என்பதற்கு ஆதாரமில்லை. ஆனால் கடவுள் சம்மந்தப்பட்ட தொடர்பு சாதனங்கள் அருவமாயிருந்தே தொழில் செய்யும். மனிதன் சம்மந்தப்பட்டவை தான் உருவமாயிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு எனில் சந்திர மண்டல தொடர்பு சாதனம் போலப் பிதிர் மண்டலத் தொடர்பு சாதனமும் ஒரு காலத்தில் கண்டு பிடிக்கப்படலாம். காரணம் என்னவெனில் நமது சூழலாகிய பஞ்சபூதப் பிராந்தியத்துக்குட்பட்ட அளவில் தான் உருவமைப்பு வாய்க்கும். அதற்கு அப்பாலான பிதிர் லோகம் முதலியவற்றிற்கு அது வாய்க்காது. தத்துவ இயல்புப் படி அது என்றும் அருவமாயிருக்கும்.

**22. இப்பரிவர்த்தனையில் புரோகிதராய் இருப்பவரின் பங்கு யாது?**

கிரியை செய்பவருக்கும் இறந்தவருக்கும் தொடர்புபட்ட அதிகாரி போல பிதிரர் இருப்பது போல கிரியை செய்பவருக்கும் பிதிரருக்குமிடையில் தொடர்புபட்ட அதிகாரி போல இருப்பவர் புரோகிதர். புரோகிதரானவர் நல்லறிவொழுக்கம் அக்கினி காரியம் சிவபூசை நெறிகளும் உடையவராய் இருந்தால் அவரிடத்தில் பிதிரர்கள் திருப்தியடைவார்கள். அத் தொடர்பில் இவர் எதற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் முதலியவற்றிற் பல பிதிர்களையும் அதற்குபகாரமாக இவர் தானங்களை ஏற்கும் போது " இதம் சிவாய நமஹ " இது சிவனுக்கு, எனக்கல்ல என்று சொல்லி ஏற்க வேண்டிய விதியுண்டு. தானம் சற்பாத் திரமானவர்கள் கையில் கொடுக்கப்பட்டால் சிற்பியின் வாயில் விழுந்த நீர் முத்தாய் விளைவது போலப் பெரும் பயனாய் விளையும் அப்படியில்லாவிட்டால் சாக்கடையில் ஊற்றிய பால் போலாகும்.

**23. சிரார்த்தம் என்பது யாது ?**

அந்தியேட்டிக்குப் பின் இறந்தவரை குறித்து நிகழும் கிரியைகள் எல்லாம் பொதுவில் சிரார்த்தம் எனப்படும். சிரத்தையோடு செய் வது சிரார்த்தமென்று பொருள்படும். சிரத்தை என்பது கிரியை செய்பவர் இறந்தவர் மேற்கொள்ளும் பிரயாசை எல்லாவற்றையும் அடக்கும். நம்மவர் சூழலில் ஆட்டத் திதி, திவசம் இரண்டும் தான் சிரார்த்தமென சிறப்பாகக் குறிப்பிடுவதுண்டு. " சும்மா ஐயருக்கரிசி கொடுப்பது" என்ற பாவனை மட்டிலிருந்து அது சிரார்த்தமாகாது. தெய்வ சிந்தனையும், தேவார திருவாசக பாராயணமும் உபவாசமு மாயிருந்து உத்தமமான திரவியங்களைத் தேடிப் பக்திபூர்வமாகச் செய்தாற்றான் அது சிரார்த்தமென்ற பெயருக்குப் பொருத்தமாகும்.

**24. துடக்குக் காத்தல் என்ற ஒரு வழக்கம் இருக்கிறதே ! அது என்ன? அது எதற்கு ?**

துடக்கு என்பது இறந்தவரிற்கும் இருப்பவரிற்கும் இருக்கும் தொடர்பு காரணமாக ஒருவருக்கேற்படும் மன நெகிழ்வான அகப்புறச் சூழ்நிலைகளைக் குறிக்கும். மன அமைதியைக் குலைக்கும் உணர்வு பூர்வமான விடயம். எனவே மனஅமைதியைப் பெறுவதற்கு சில காலம் எடுக்கும். அந்தக் காலத்தை துடக்குக் காலம் என்று கூறலாம். முப்பது இரவுகள் வரை இக்காலம் தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் அகல நீள பலாபலன்கள்

6. நன்மை
7. மத்திமம்
8. இராச்சியம்
9. கேடு
10. பாக்கியம்
11. புத்திரலாபம்
12. பிள்ளையின்மை
13. மரணம்
14. பகை
15. துன்பம்
16. செல்வம்
17. நாளுக்கு நாளாக்கம்
18. நஷ்டம்
19. புத்திரர் கவலை
20. இனஞ்சேரும்
21. ஆடுமாடிறக்கும்
22. சோபனமுண்டு
23. பிணி
24. மனைவி மரணம்
25. திருவாழும்
26. செல்வப்பேறு
27. அரசாளும்
28. ஆயுள் விருத்தி
29. சுற்றுப் பெருக்கு
30. நோய்
31. தரித்திரம்
32. இழந்த பொருளெய்தும்
33. இருமனைவியர்
34. குடிகேடு
35. ஜீவன விருத்தி
36. சுகமுடைமை
37. பசுவிருத்தி
38. நினைத்தது கெடுதி
39. இராஜ சன்மானம்
40. மனைவி நாசம்
41. பாக்கியம்
42. கீர்த்தி
43. இராஜ தண்டம்
44. அங்கவீனம்
45. சற்புத்திரம்
46. பிசாசு வாசம்
47. சூனிய பேடை
48. தீயினாற் கேடு
49. மலடாவன்
50. சர்வாதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவுத்திட்டங்கள்

- 1 Perch = 25.29285 $m^2$
- 1 Perch = 272.25 $F^2$
- 1 Acre = 4 R = 160 P
- 1 Acre = 4046.856 $m^2$
- 1 Acre = 43559.055$ft^2$
- 1 Acre = 4840 $yard^2$
- 1 Acre = 0.40468564 Ha
- 1 Ha = 10000 $m^2$
- 1 Ha = 2.471054 Acres
- 1 Ha = 2.471054 Acres
- 1 Ha = 395.3687 Perch
- 1 : 1 mile = 1 : 63360
- 18 Kuli = 1 LM - High land
- 12 Kuli = 1 LM - Paddy
- 1 Acre = 15LM + 13 (9/32)Kuli - high
- 1 Acre = 23LM + 7 (7/32)Kuli - Paddy
- 1 Kuli = 14.2857 $m^2$
- 1 LM = 1 Kuruni = 10 P
- 1 Amunu = 2.5 A = 1 Ha
- LM = Lachchem = Parappu
- 1 Pal = 100 P
- 1 Busal = 80 P
- X+N = , Y+E =
- 1 Inch = 2.54 cm
- 1 Link 0.2011683 m
- 1 m = 4.97096 Links
- 1 km = 0.62137 mile
- 1 mile = 1.609344 km
- 1 foot = 0.304800 m
- 1 m = 3.28084 feet
- 1 yard = 0.9144 m
- 1 chain = 66 ft
- 80 chain = 1 mile



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

கடந்த 23.06.2018 சனிக்கிழமை அன்று இவ்வுலக வாழ்வை நிறைவுசெய்து எம்மை மீளாத்துயரில் மூழ்க வைத்து ஈழத்துச் சிதம்பரனாரின் பாதங்களில் சரணடைந்த அமரர் செளந்தராம்பிகை இராசையா அவர்களின் திடீர் மறைவினால் ஏங்கி சித்தம் தடுமாறி செய்வதறியாது நாம் திகைத்து நின்றபோது செய்தி அறிந்து ஓடோடி வந்து ஆறுதல் கூறி உதவிகள் புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறவுகளுக்கும், இறுதிக் கிரியைகளின்போது கலந்துகொண்டவர்களுக்கும், நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலியை தெரிவித்தவர்களுக் கும் பல வகையிலும் ஒத்தாசை புரிந்த உறவி னர்கள், அயலவர்கள், ஊரவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், இம்மலரை சிறந்த முறை யில் வெளியிட உறுதுணை புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் பங்கு பற்றிக் கொண்டிருக் கும் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.

(தனிப்பட்ட முறையில் நன்றிகள் தெரிவித்துக்கொள்ள இயலா மைக்கு மனம் வருந்துகின்றோம்)



நன்றி


இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




* அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவி Printers, Jaffna.
021 300 3030

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org